இல்லொளி

4281

"குகப்ரியை"

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை-4

தேவி சௌதுராணி

பங்கிம் சந்த்ரர் உயர்தரமான நாவல்களுள் ஒன்று. வங்காளியிலிருந்து அழகாய் மொழிபெயர்த்தவர்: ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன், பீ. ஏ. யாவரும் புகழும் நூல்.

தினமணி: எல்லோருடைய மனத்தைக் கவரும் வண்ணம் வரையப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பவர் ஒவ்வொருவரும் இதை மொழிபெயர்ப்பு என்று எண்ண முடியாது. புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியது முதல், முடியும் வரையில், கீழே வைக்கமுடியாதபடி அவ்வளவு அழகாக உணர்ச்சி ததும்ப செவ்விய நடையில் இதை ஸ்ரீ ராஜ கோபாலன் எழுதியிருக்கிறார். தமிழர்கள் இதை விரும்பி வரவேற்பார்களென்பதில் சிறிதேனும் ஐயமில்லை. புத்தகத்தை ஆடவர், பெண்மக்கள், மாணவ மாணவிகள் அனைவரும் அவசியம் படிக்கவேண்டும்.

அகில இந்திய ரேடியோ சென்னை: இந்நூலின் (தேவி சௌதுராணி) கதை அமைப்பும், அக்கதையினைப் பல சுவையும் தோன்றக் கூறும் முறையும் மிக்க இன்பம் அளிக்கின்றன. இது வழி - நூலாகத் தோன்றாது - முதல் நூல் போலவே மிளிர்கின்றது. இவ்வழகிய நூல் எல்லோரும் படித்து நல் இன்பமும் பயனும் ஒருங்கே எய்தற்குரியது.

தனவணிகன்: இது சரித்திர சம்பந்தமான நாவலாயிருப்பினும், அநேக அரிய கருத்துக்களைத் தன்னிடையே கொண்டிருக்கிறது. கதை ருசியாயிருக்கிறது. தத்துவம் நிரம்பிய கதைகளில் இது ஒன்று. மொழிபெயர்ப்பு நன்றாக இருக்கிறது.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

இல்லொளி

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN:
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

"குகப்ரியை"

Y. M. G.
ASSOCIATION
PAGANERI.
பாகனேரி

PRESENTED BY
V. PR. PL. M.
PAGANERI.

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் : : சென்னை
காபிரைட்] 1947 [ரூ. 1

உள்ளுறை

எண்			பக்கம்
1.	அரும்புகள்	...	1
2.	மன நெகிழ்ச்சி	...	5
3.	பெண் உள்ளம்	...	8
4.	இடியும் மின்னலும்	...	16
5.	உதய ராகம்	...	22
6.	தேவானையம்மாள் கோபம்	...	25
7.	விரக்தி	...	31
8.	புயற்காற்று	...	37
9.	புரட்சி	...	43
10.	மாறுதல்	...	47
11.	ஆனந்த வெள்ளம்	...	50
12.	விமோசனம்	...	56
13.	மங்களம்	...	64

அல்லயன்ஸ் பிரஸ்,
சென்னை - 4
நெ. 109, பிப்ரவரி, 1947

இல்லொளி

அத்தியாயம் 1

அரும்புகள்

கண்ட்ராக்டர் லம்போதர முதலியார், கொழுத்த பணக்காரர். குத்தகை எடுத்து எடுத்து லட்சக்கணக்காகப் பணம் குவித்துவிட்டார். எத்தனையோ தானமும் தர்மமும் செய்கிறார். ஆனால் ஊரார் அவரை, "வெற்றிலை முதலியார்" என்றுதான் சொல்வது வழக்கம்.

சென்னைக்கு அவர் முதலில் வந்தபொழுது வெற்றிலை வாழையிலை முதலியவைகளை அயலூர்களிலிருந்து வரவழைத்தும், ஏலத்தில் எடுத்தும் விற்றுவந்தார். பிறகு படிப்படியாய், வீடு, கட்டடங்கள், அரசாங்கத் தொழிற்சாலைகள் முதலியவைகளைக் குத்தகை பிடித்து மிகுந்த செல்வவந்தராகிவிட்டார்.

லம்போதர முதலியார் என்றால் சென்னையில் எல்லோருக்கும் தெரியும். "பணமிருந்தால் பத்தும் வரும். அண்ணிமட்டும் இருந்து ஆளக் கொடுத்து

வைக்கவில்லை. இந்த வருஷம் 'ராஜா ஸர்' பட்டம் கூட வரப்போகிறதாமே?" என்று அண்டை வீட்டுப் பாப்பாத்தியம்மாள் பெருமூச்செறிவாள்.

அவள் மனத்துள் பழைய நினைவுகள் ஒன்றன்பின் ஒன்றாய் எழும். ஒரு காலத்தில், பாப்பாவை லம்போதர முதலியாருக்கே கொடுப்பதாய் நிச்சயித்திருந்தது. ஆனால் அவள் தாயார், "வெற்றிலை விக்கிற பயலுக்கு என் மகளைக் கட்டவா?" என்று கூறிவிட்டாள். பாப்பா பாவம் என்னென்னவோ செய்து பார்த்தாள். ஒன்றும் சாயவில்லை. கடைசியில் ஜமீன்தார் மகனான ஒரு மூடனுக்குப் பலியானாள் பாப்பா.

பாப்பா தங்கமான பெண்; குடும்பத்துக்கு ஏற்றவள். மாமி நாத்தி முதலியவர்களால், சார்ந்தாருக்குச் சந்தனம், முகர்ந்தாருக்குத் தாழம்பூ என்று புகழப்பட்டாள். ஆனாலும் என்ன? அவள் கணவன் புண்யகோடி முதலி பெருங்குடியன். மூன்று நான்கு வருஷங்களுக்குள், லட்ச ரூபாய் பெறுமானமுள்ள எல்லம்பாடி ஜமீன், ஆரணி ஜாகீர்தாரிடம் அடைமானம் வைத்து முழுகிப்போயிற்று.

புக்ககம் போனபொழுது ஜமீன்தாரிணியாயிருந்த பாப்பா மூன்று வருஷங்களுக்குள், எல்லாவற்றையும் இழந்து குழந்தைகளுடன் பிறந்தகம் திரும்பினாள். துயரங்களுக்கெல்லாம் சிகரம்போல், அவள் கணவன் புண்ணியகோடியும் குடி மிகுதியினால் ஈரல் வீங்கி ஒரே தூக்கமாய்த் தூங்கிவிட்டான்.

லம்போதர முதலியார் பாப்பாவின் விஷயத்தில் நிரம்பவும் பரிதாபப்பட்டார். ஆனால் அவளுக்குச் சிறு உதவிகள் செய்யக்கூடக் கூசினார். ஊரார் தாறுமாறாக அவள் பெயரைக் களங்கப்படுத்திவிடுவார்

களோ, என்ற பயம். மனைவியை இழந்த தன்னைக் குறை கூறினாலும் குற்றமில்லை. பேதையான அவளை ஏதாவது சொல்லிவிட்டால், என்று எண்ணும் பொழுதெல்லாம் அவர் மனம் சலிக்கும். இதனால் மற்றவர்களிடம் காண்பிக்கும் அவ்வளவு பரிவுகூட அவர் பாப்பாவிடத்திலும் அவள் குழந்தைகளிடத்தி லும் காண்பிக்கவில்லை.

பாப்பாவின் மகன் சிவக்கொழுந்துக்கு வயது பதினைந்து முடிந்திருந்தது. ஊரிலே, ஒரு டாக்கிக் கொட்டகை, குதிரைப் பந்தயம் பாக்கிவிடாமல் சுற்றிக்கொண்டிருந்தான். ஜமீன்தார் மகன் மேஜர் ஆன பிறகு வசூலித்து விடலாமென்று இரகசிய மாய்க் கடன் கொடுத்துக்கொண்டிருந்தார்கள் மார் வாடிகள்.

மற்ற சிறு குழந்தைகளுக்கு வயது, எட்டும், ஆறும் ஆகியிருந்தது. கருணையினால் அந்த ஜாகீர்தார் ஏதோ ஏற்பாடு செய்து, மாதம் நாற்பது ரூபாய் கொடுத்துவந்தார். சிவக்கொழுந்து வரவர மிகவும் மோசமாய் நடந்துகொள்ள ஆரம்பித்தான். வீட்டி லிருந்த வெள்ளிப்பாத்திரங்களும் நகைகளும் ஒவ வொன்றாய் வெளியே செல்ல ஆரம்பித்தன.

“ இந்தச் சள்ளைகளெல்லாம், லம்போதரன் மனம் வைத்தால் ஒரு நொடியில் எவ்வளவோ சீராய்விடும். ஊருக்கெல்லாம் உபகாரி, என் பாவம்! என் விஷ யத்தை மட்டும் காதிலே கூடப் போட்டுக்கொள்ளுகிற தில்லை” என்று மனம் புழுங்குவாள் பாப்பா.

லம்போதர முதலியார் தன் தாயாரையும், தன் மருமகள் தாயற்ற புனிதவதியையும் பாப்பாவுக்கு ஏதாவது உதவிசெய்யும்படி கூறுவார். “ஐயோ

பாவம்! நீயும்தான் அந்தப் பையனைக் கொஞ்சம் பார்த்து ஏதாவது சொல்லக்கூடாதா? பாவம், அவள் என்ன செய்வாள்? நான் சொன்னால் அந்தப் பிசாசு கேட்குமா? கிழவன் பேச்சைக் கிண்ணரக்காரன் கேட்பானா?'' என்று சொல்லுவாள் தேவானையம்மாள். புனிதத்திற்குப் பாப்பாவிடம் வெகு பிரியம். புனிதமும் சிவக்கொழுந்தும் ஏறக்குறைய ஒரே வயதினர். பாப்பாவும் புனிதத்தின் தாய் செல்வமும் இணைபிரியாம லிருந்தவர்கள். இதனால் பாப்பா புனிதத்தைத் தன் மகளைவிடப் பன்மடங்கு அதிகமாய்ப் பாவித்தாள். புனிதத்திற்கும் நாளைக்கு ஒரு முறையாவது பாப்பாவைப் பார்க்காவிட்டால் தூக்கம் வராது.

பாவம், தேவானையம்மாளுக்குத் தள்ளாத காலத்தில் ஒரே சமயத்தில், மகளையும் மருமகனையும் இழந்து, தாயற்ற குழந்தைகளையும் வளர்ப்பதென்றால் சுலபமா? புனிதவதி மிகவும் சிறு குழந்தை. தணிகைவேலன் அவளைவிட மூத்தவன்தான். ஆனாலும் இளமை முதலே ஒன்றாய் உண்டு உடுத்து வளர்ந்தவர்களாகையால், காண்போர், இருவரும் ஒரு தாயின் குழந்தைகளே என்று எண்ணுவார்கள்.

பள்ளிக்கூடம் போகும்போதும், வரும்போதும், விளையாடும்போதும் எப்பொழுதும் தணிகைவேலனும், புனிதமும் ஒன்றாகவேதான் இருப்பார்கள். ஒவ்வொரு தடவையும், தேவானையம்மாள், சரி, இருவருக்கும் வயதுவந்தபின் கல்யாணம் செய்துவிடலாம் என்று எண்ணுவாள். ஆனால் மறு விநாடி, "இரண்டும் தாயற்றதுகள், நான் என்ன கற்பகோடி காலம் சாசுவதமா யிருக்கப் போகிறேன்? எங்கேயாவது நல்ல பெரிய குடும்பத்தில் கொடுத்தால், ஆண் பெண்

ஒத்தாசைக்குக் கஷ்டமில்லாமல் இருக்கும். இங்கே ஏனென்று கேட்பாரில்லை" என்று எண்ணுவாள்.

அத்தியாயம் 2

மன நெகிழ்ச்சி

அப்பொழுது புனிதத்திற்கு வயது பதினறு. சென்னையில் மேரி அரசியார் கலாசாலையில் இன்டர்மிடியேட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். தணிகை வேலன் ராஜதானிக் கல்லூரியில் பீ. ஏ., வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.

தேவயானையம்மாள் சீக்கிரமாக புனிதத்திற்குக் கல்யாணம் செய்துவிட விரும்பினாள். ஆனால் அவள் தகப்பனுடைய உயிலின்படி (மரண சாசனத்தின்படி) அவள் விருப்பமானபொழுது இஷ்டமானவரைக் கல்யாணம் செய்துகொள்ளலாம் என்று அவளுக்கு உரிமை இருந்தது. ஆகவே அவளை தானே கேட்கவோ தடுக்கவோ தனக்கு உரிமையில்லை யென்று சொல்லி விட்டார் முதலியார்.

ஆனால், இந்த விஷயமாய், தனிமையில் அவர் தேவானையம்மாளிடமும் தணிகைவேலனிடமுங்கூடக் கேட்டதுண்டு. தணிகைவேலன் அவளிடம் மிகவும் அன்பாயிருந்தானேயன்றி, தானே அவளை மணந்து கொள்ளக் கூடுமென்று அவன் எண்ணவேயில்லை; அவனுக்குத் தோன்றவுமில்லை.

ஆனால், முதலியாரோ தானாக வலுவிலேயே அவளைத் தன் மகனுக்குக் கல்யாணம் செய்துவைத்து விட்டால் அவள் தகப்பன் வகையைச் சேர்ந்தவர்கள்

பணத்திற்கு ஆசைப்பட்டு, அவளை வற்புறுத்தியிருப்பதாகச் சொல்லக்கூடுமென்று அஞ்சினர்.

"என்னமோ அப்பா, அதுவும் தாயற்றது, இதுவும் தாயற்றது. மாமனார் மாமியார் ஓர் அருமை பெருமை ஒன்றுமில்லாமல் போவதைவிட, இருவருக்குமே நல்ல இடமாய் அமைந்தால் பார்ப்போமே? தவிர அவளோ இஷ்டமான வரையில் காத்திருக்கலாம். இவன் காத்திருப்பானேன்?" என்பாள் தேவானை.

புனிதத்தின் இருதயத்தில் தணிகைவேலன் தான் இடம் பெற்றிருந்தான். ஆனால் அவன் தன்னை விரும்புகிறானா? இல்லையா? என்று அவளால் தீர்மானிக்க முடியவில்லை. "நான் அவனைப்பற்றி நினைத்தென்ன பயன்? அவன் என்னை அறிந்துகொள்ளாவிட்டால், என்ன உபயோகம்? அவன் மனநிலையை உள்ளபடி அறிய முடிந்தால் சரி. இல்லாவிட்டால் – ஏன்? இப்படியே, கன்னியாகவே இருந்துவிடுகிறேன்" என்று எண்ணுவாள்.

ஆனால் தேவானையம்மாளும் முதலியாரும் கல்யாண விஷயத்தைப் பிரஸ்தாபிக்கத் தொடங்கியதிலிருந்து புனிதத்தின் மனத்தில் ஒரு புயற்காற்று வீச ஆரம்பித்தது. தேவானையம்மாள் அவள் இஷ்டத்திற்கு விரோதமாய் நடப்பவள் அல்ல என்றும், தணிகைவேலனுக்கும் தனக்கும் விவாகம் நடப்பதில் அவளுக்குப் பூரண சம்மதந்தான் என்றும் புனிதம் அறிந்திருந்தாள். முதலியாருக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பம் உண்டு என்றும் அவளுக்குத் தெரியும். ஆனால் தணிகைவேலன் தன்னிடம் நடந்துகொள்ளும் மாதிரியிலிருந்து அவன் மனோ நிலையைத் தெரிந்துகொள்ள முடியாதவளாய்த் தவித்தாள் புனிதம்.

தணிகைவேலன் புனிதத்திடம் மிகவும் வாத்ஸல்யமாய் இருந்தான். பாடங்களில் சந்தேகமிருந்தால் சொல்லிக்கொடுப்பான். ஏன்? புனிதத்தின் பிரைவேட் வாத்தியார் தணிகைவேலன்தான்! கூடைகூடையாக வேடிக்கைக் கதைகளைச் சொல்லி புனிதத்தைச் சிரிக்கவைப்பான்; தேவானையம்மாளைச் சிரிக்கவைப்பான்; துக்கமே உருவான முதலியார்கூட அவன் பேச்சுக்களை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு தனக்குள் சிரித்துக்கொள்ளுவார். தணிகைவேலன் அவ்வளவு சரளமான இளைஞன்.

'ஹிப்னாடிஸம்' என்று சொல்வார்களே, அந்த சாஸ்திரம் தனக்குமட்டும் தெரிந்திருந்தால் தணிகைவேலன் தன்னிடம் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளலாமே என்று எண்ணுவாள் புனிதம். இப்படிப்பட்ட எண்ணங்கள் திரண்டுவந்து புனிதத்திற்கு துயரத்தைக் கொடுத்தன.

"புனிதம்! பாட்டி உன் கல்யாணத்திற்குப் பலமாய் ஏற்பாடு செய்கிறப்போல் இருக்கிறதே! என்ன சமாசாரம்?" என்று தணிகைவேலன் கேட்டான். பிறகு, விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, "கல்யாணம் ஆன மறுநாள் நாம் யாழ்ப்பாணத்திற்குப் போய் பதினைந்துநாள் இருந்துவிட்டு வரவேண்டும். உனக்குச் சம்மதந்தானே?" என்று கேட்டான். யாழ்ப்பாணம் என்று அவன் சொன்னதும் குலைகுலையாகத் தொங்கும் இளநீர்களும் தலைசாய்ந்து செழிப்பாய் நின்ற தென்னை மரங்களும் அவள்முன் வந்துநின்றன. அந்த மரச்சோலையில் காலால் மணலை வாரி இறைத்துக்கொண்டு தணிகைவேலனும் புனிதமும் கைகோர்த்த வண்ணம் நடந்து சென்றூர்கள்.

அப்போது ஆனந்தமாய் வீசிய கடற்காற்று 'விர்' என்று வேகமாய் வந்து தணிகைவேலனின் அங்கவஸ்திரத்தை தூக்கிச்சென்றது. தணிகைவேலனும் புனிதமும் வஸ்திரத்தைப் பிடிக்க போட்டி போட்டுக் கொண்டு ஓடினார்கள். தணிகைவேலன் முன்னே ஓடி வஸ்திரத்தைப் பிடித்துவிட்டான். ஆனால் 'லபக்' கென்று பிடுங்கிக்கொண்டுவிட்டாள்; புனிதம் ஜயித்துவிட்டாள்!....

இப்படியாக அன்றிரவு இன்பக் கனவு கண்டு திடுக்கிட்டெழுந்தாள் புனிதம். அதற்குப் பிறகு அவளுக்குத் தூக்கமே வரவில்லை. என்னமாக வரும், அவள் மனம் இதையே நினைத்துப் புளகாங்கிதம் அடைய ஆரம்பித்தபோது?

மறுநாள் அவள் உற்சாகம் உச்சநிலையில் இருந்தது. அவள் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஆனால் அவள் எதற்காக அப்படிச் சந்தோஷப் படவேண்டும்? அவள் கண்டது கனவுதானே?

அத்தியாயம் 3

பெண் உள்ளம்

அன்று வெள்ளிக்கிழமை. காலை சுமார் எட்டுமணி இருக்கும். புனிதம் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, தோட்டத்தில் சண்பக மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு ஈரக் கூந்தலைக் கோதி ஆற்றிக் கொண்டிருந்தாள்.

காலைவேளையாதலால் பட்சிகளெல்லாம் தோட்டத்தில் ஒரே கூச்சல்போட்டு அமர்க்களம் செய்து

கொண்டிருந்தன. மரக்கிளைகளின் இடைவெளி வழியாகக் காற்றடித்தபோது, சூரிய வெளிச்சம் பளிச்சென்று பாய்ந்து, புனிதத்தின் கண்களைக் கூசச் செய்யும்; சில சமயங்களில் அவளுடைய கன்னங்களிலும் முகத்திலும் பட்டு அவள் அழகைப் பிரதிபலிக்கச் செய்யும். குழற் சுருள்கள் காற்றில் அடிக்கடி அவள் கன்னங்களில் விழுந்து ஊசலாடிக் கொண்டிருந்தன.

தலைமயிரை ஆற்றுவதைத் தவிர மற்றப்படி புனிதம் மெய்ம்மறந்து உட்கார்ந்திருந்தாள். சுற்றி நடந்து கொண்டிருந்த ஒன்றும் அவள் கண்ணிலோ காதிலோ படவே இல்லை. பல நிகழ்ச்சிகள் அவளுடைய மனக் கண்முன் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. எதையோ நினைத்துத் திடீரென்று புன்னகை கொள்ளுவாள். மறுவிநாடி முகம் சிவக்கும். பிறகு மிகுந்த வேதனையுடன் ஆழ்ந்து பெருமூச்செறிவாள்.

அவள் மனத்திலிருந்த ஏக்கம் அவளுடைய அங்கங்களில்கூடப் பரவினதுபோல் இருந்தது. அதில் அவள் கண்ட இன்பக் கனவின் ருசியும் அது கனவு தான் என்ற உணர்ச்சியும் மெல்லிய வேதனையும் கலந்திருந்தன.

யாரோ வேகமாக நடந்துவரும் காலடிச் சத்தத்தைக் கேட்டு தன் கற்பனை உலகத்திலிருந்து கீழே இறங்கினுள் புனிதம். தணிகைவேலன் எதிரே நின்ருன்.

தன் நிலைமையைக் கண்டு அவன் ஏதாவது ஊகித்துவிடுவானே என்று சந்தேகப்பட்டாள். சாதாரணமாகப் பேசுபவள்போல, "பாட்டி என்னைச்

கூப்பிட்டாளா?" என்று கேட்டாள் அவன் முகத்தைக் கண்ணெடுத்துப் பார்த்து.

"இல்லை,....எனக்குத் தெரியாது. நான் இப்பொழுது உள்ளே இருந்து வரவில்லை. நேராக டென்னிஸ் கிளப்பிலிருந்து வருகிறேன். என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா?" என்று சொல்லிக்கொண்டு அவள் உட்கார்ந்திருந்த பலகைக் கல்லின் மற்றொரு பக்கம் தொப்பென்று உட்கார்ந்தான் தணிகைவேலன்.

என்ன பேசுவது, எப்படிப் பேசுவது, என்று யோசிப்பவன்போல் சற்றுநேரம் மௌனமாக யோசித்தான் தணிகைவேலன்.

"என்ன, தணிகு? என்ன சங்கதி? ஏது இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம் கிளப்பிலிருந்து திரும்பி விட்டாய்?" என்று ஏதாவது பேச்சுக் கொடுப்பதற்காக புனிதம் ஆரம்பித்தாள்.

தணிகைவேலன் முகம் சற்றே அசடு தட்டிற்று. "இல்லை. ஒன்றுமில்லை. உன்னிடந்தான் ஒரு சங்கதி கேட்கலாமென்று...." என்று மேலே சொல்லுவதற்கு வெட்கப்பட்டவன்போல் இருந்தான்.

புனிதத்திற்கு உடல் புளகித்தது. உணர்ச்சி மிகுதியினால் அவள் இருதயம் தடதட வென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது.

"என்னிடமா? நிஜமா?" என்று குழந்தை கொஞ்சுவதுபோல குதலை மொழியிற் கேட்டாள் புனிதம். அவள் குரலில் ஆனந்தமும், ஆவலும் ஒருங்கே கலந்திருந்தன.

"ஆம், நிஜந்தான். உன்னைத்தான் அபிப்பிராயம் கேட்கிறேன்" என்று அவன் ஏதோவொரு தீர்மானத்திற்கு வந்தவன்போலக் கேட்டான்.

"என்ன தணிகு! அபிப்பிராயமா? எனக்கென்ன சொல்லத் தெரியும்? நான் ஏதாவது உளறி வைப்பேன். அது சரியாயிருந்தாலும் இருக்கலாம். பைத்தியக்காரத்தனமா யிருந்தாலு மிருக்கும். தவிர, பெரியவர்களைச் சிறியவர் கேட்பதுண்டு. என்னைக் கேட்டால்?"

"இல்லை, புனிதம்! உன் குணமும் மனப்போக்கும் எனக்குத் தெரியாதா? உனக்குத் தோன்றுகிறதைச் சொல்லேன். கேட்கலாமா கூடாதாவென்று மூன்று நாளாய் யோசித்தேன். நீ பாட்டியுடனேயே இருந்தாய். இன்றுதான் தனியே இங்கு உட்கார்ந்திருப்பது தெரிந்தது; வந்தேன். ஏன், உன் கண் சிவந்திருக்கிறது?"

"ஒன்றுமில்லையே, சரி. சங்கதி என்ன சொல்லவில்லையே?"

"புனிதம்! இந்த விஷயத்தில் நீ ஒளிக்காமல் சொல்லவேண்டும் ஆலோசித்துச் சொல்லுவதானுலும் போதுமான சாவகாசம் இருக்கிறது. கேட்டபிறகு, பரிகாசம் செய்யக்கூடாது" என்று மிகவும் தணிந்த குரலில் கூறினுன் தணிகைவேலன்.

அவள் இன்பக் கிளர்ச்சிகொண்டு தவிக்கலானுள். ஈசுவர ஸன்னிதானத்திற்குச் செல்லும் பரமபக்தன்போல் அவளது உள்ளம் நெகிழ்ந்தது. சற்று நேரம் இருவரும் பேசவில்லை. நாணத்தின் ஒரு சிறு அலை அவள் முகத்தில் தோன்றி மறைந்தது. சற்று சமாளித்துக்கொண்டு, "சரிதான். இவ்வளவு பீடிகை எதற்கு? சங்கதியைச் சொல்லேன்" என்று மெல்லிய குரலிற் கேட்டாள் புனிதம்.

தணிகைவேலன் தயங்கினுன்.

புனிதம் தலையைக் கோதி முடியும் பாவனையாக அவனை ஏறிட்டுப் பார்த்தாள். தணிகு சிரித்தவண்ணம் தலையைக் குனிந்துகொண்டான்.

"புனிதம்! உன்னுடன் படித்தாளே, சிவகாமி, அவளை உனக்குத் தெரியுமா?" என்று உருக்கத்துடன் அவன் அவளைக் கேட்டான்.

திடீரென்று ஒரு சிறு புயல் அவள் மனத்துள் எழுந்தது. நெஞ்சு படீர் படீர் என்று அடிக்க ஆரம்பித்தது.

"ஏன், தெரியாமலென்ன? என் வகுப்புத்தானே. திவ்வியமாய்த் தெரியும்" என்ற வார்த்தைகள் மிகுந்த சிரமத்துடன் அவள் வாயினின்றும் எழுந்தன.

தலை குனிந்தவனாய், "அவளை எனக்கு நிச்சயம் செய்துவிட்டாராம் அப்பா. அவளைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. உனக்குத் தெரிந்திருக்குமென்று எண்ணுகிறேன். குணம் எப்படி? உள்ளபடி சொல்லு" என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டான் தணிகு.

"அது சரி. உன் எண்ணமென்ன?" என்று மிகுந்த சிரமத்துடன் முகத்தில் முறுவலை வரவழைத்துக்கொண்டு கேட்டாள் புனிதம்.

"எனக்கு இப்பொழுதொன்றும் கல்யாணத்திற்கு அவசரமில்லை. வாயைத் திறந்தால் போதும். இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படி, அப்படி என்று ஏதேதோ சொல்ல ஆரம்பித்துவிடுகிறார்கள். எனக்கொன்றுமே புரியவில்லை. பாட்டியிடம் சொல்லவும் பயமாயிருக்கிறது. யாரிடம் சொல்வது, என்ன செய்வது, ஒரே குழப்பமாயிருக்கிறது. நீ வயதில் சிறியவளானாலும் என்னைவிட நீ சூட்சுமமாய் எல்லாவற்றை

யும் புரிந்துகொள்ளுகிருய். நீயும் இகழ்வாயோ என்று கொஞ்சம் பயந்தேன். வேறு வழியில்லை. அப்பாவோ பிடித்த பிடியை விடமாட்டார். அவள் அழகி என்று மட்டும் எனக்குத் தெரியும். மற்றப்படி குணம் முதலியவைகளை நீதான் சொல்ல வேண்டும்" என்று சொல்லித் தலையைக் குனிந்துகொண்டான் தணிகை வேலன்.

புனிதம் புடவையின் முந்தானையைக் கையில் பிடித்து ஏதோ விஷமம் செய்தவளாய், மிகுந்த சிரமத்துடன் பொங்கி எழும் மனதைத் திடப்படுத்திக் கொண்டிருந்தாள்.

சற்றுநேரம் ஒரே நிசப்தம்.

"புனிதம்! யோசித்துச் சொல்லுவதானுலும் சரி. போதுமான சாவகாசம் இருக்கிறது" என்று அவன் தலைகுனிந்தவண்ணம் மிகவும் தணிந்த குரலில் சொன்னுன்.

புனிதம் சமாளித்துக்கொண்டாள். "அது சரிதான். அவளைப்பற்றி சொல்வதற்கு - சம வயதினளான எனக்கு எப்படித் தெரியும்? இருந்தாலும், நீ விரும்பும் பக்ஷத்தில், நல்லதென்றே எனக்குத் தோன்றுகிறது. அவள் மிகவும் நல்ல பெண்தான், சற்று முன்கோபி. படபடவென்று கோபத்தைக் கொட்டிவிடுவாள். அடுத்த விநாடி பரம சாதுவாகிவிடுவாள். பொதுவாக மற்றப் பெண்களைவிட பணிவும் அதிகந்தான்.... தவிர 'கோபிப்பதற்கு இங்கென்ன கிடக்கிறது? அவளே ராணி, அவளே மந்திரி" என்று சொல்லுகையில் அவள் குரல் கம்மிப்போயிற்று.

அப்பொழுதும் தணிகு தலை நிமிரவேயில்லை. சற்று நேரம் ஒரு குச்சியினுல் கோடிட்டுக் கோடிட்டுக்

கலேத்தவனாய், "புனிதம்! நீ உள்ளபடி உன் மனத்தி லிருந்ததைச் சொன்னதுபற்றி எனக்குச் சந்தோஷம், நீ எங்கே கேலி செய்வாயோ என்று பயந்தேன். நல்ல வேளை! இந்தமட்டும் புனிதவதியார் கருணை. நீ என்னதான் சொல்லு, வயதுமட்டும் ஆயிற்றே ஒழிய உன்னைப்போல் சட்டென்று ஒரு பதில் சொல்ல என்னால் முடிகிறதில்லை" என்று நிறுத்தினான் தணிகு.

புனிதத்தின் முகத்தில் ஒரு க்ஷணம் சோகம் கலந்த ஒரு புன்னகை தோன்றி மறைந்தது.

தணிகைவேலன் தலை நிமிர்ந்தான். "அடே! அப்பா, தணிகு! காபி சாப்பிட வாடா!" என்று பாட்டியம்மாளின் குரல் கேட்டது. தணிகு எழுந்து நின்றான். "பாட்டி கூப்பிடுகிறாள், போகட்டுமா?" என்றான்.

"ஆகா, போயேன்!" என்று புனிதம் இயந்திரம் போல் பதில் சொன்னாள். அவன் போனதும் தலையி லிருந்த பளு தரையில் விழுந்ததுபோல் இருந்தது. அவள் ஒரு நெடுமூச்செறிந்தாள். அவள் நெஞ்சு படீர் படீர் என்று சம்மட்டி கொண்டடிப்பதுபோல் துடிக்கலாயிற்று.

ஒய்யார நடையுடன் சீட்டி யடித்துக்கொண்டு கையிலிருந்த "பாட்"டைச் சுற்றிக்கொண்டே அவன் செல்வதைக் கண்ட அவள் சிறிது நகைகொண்டாள். மறு விநாடி அவள் முகம் சிவந்தது.

துயரம் தாளாமல் மார்பு எங்கே வெடித்து விடுமோ வென்றெண்ணுபவள்போல் இரு கரங்களை யும் மார்பில் புதைத்தவளாய்க் கற்சிலைபோல் உட்கார்ந் திருந்தாள். குழந்தைப் பருவமுதல் அதுவரையில்

நடந்த ஒவ்வொரு சிறு சம்பவமும் அவள்முன் தோன்றித் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. இன்னதென்று சொல்லமுடியாத ஒருவிதமான வேதனையினால் அவள் மனம் தவித்தது.

"தணிகு! இவ்வளவு நாள் என்னுடன் நெருங்கிப் பழகியும் என்னை நீ தெரிந்துகொள்ளவில்லை. அட அசடே! என்னைத் தெரிந்துகொள்ளாததுகூடப் போனால் போகட்டும். சிவகாமி எப்படி என்று என்னையே கேட்க வந்தாயே? நீ கேட்டாலும், கேட்காவிட்டாலும் மாமா தன் இஷ்டப்படிதான் நடப்பார். அது தெரிந்த சங்கதிதானே. அருகிலேயே இருக்கும் என்னையே நீ புரிந்துகொள்ளவில்லையே! ....உன்னைச் சொல்லுவதில் குற்றமில்லை. நீ இன்னும் தெருவில் கோலியாடும் குழந்தையாய்த்தானிருக்கிறாய். நான்தான் பித்து...." என்று மனம் கலங்கி ஏதோ தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

"அவனைப் பார்க்காமலும், ஆவலுடன் பேசாமலும் ஒரு நாள், ஒரு நிமிஷம், ஒரு விநாடியாவது இருக்க முடிகிறதில்லை எனக்கு. காதல், காதல் - என்று கதைப் புஸ்தகத்தில் படிப்பான் அவன், ஆனால் தனக்காகவே தெரியாமல், சொல்லியா தெரியப்போகிறது? மாமாவுக்குத்தான் முறைப் பெண்ணாயிற்றே என்று கூடவா எண்ணமிராது?....ஒருவேளை....உயில்... விஷயமாய்ப் பேசாமலிருக்கிறாரோ? இருந்தாலென்ன நேரில் கேட்கக்கூடாதா? பாட்டியிடம் சொல்லக் கூடாதா? அவ்வளவு தூரம் போவானேன்? இந்தத் தணிகு ஓர் அணுவளவு புரிந்துகொள்ளக்கூடாதா? சிவகாமியைப்பற்றிக் கேட்டுவிட்டு ஒய்யார நடை நடந்து போகிறானே?....வேடிக்கைக்காகவாவது 'ஏன்

புனிதம்! உன்னையே மணந்துகொண்டால்?' என்று கேட்கக்கூடாதா?....''

"அம்மா, புனிதம்! ஏனம்மா தனியாய் உட்கார்ந்திருக்கிறாய்? வெயில் ஏறிவிட்டதே, உள்ளே போயேன்! ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்? உடம்பு சுகமில்லையா?'' என்று கேட்டவராய் மரத்தருகே வந்தார் முதலியார்.

புனிதம் திடுக்கிட்டாள். எங்கே தன் மனத்தில் தோன்றியவைகளை வாய்விட்டுச் சொல்லிவிட்டோமோ என்று சந்தேகிப்பவள்போல் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

அத்தியாயம் 4

இடியும் மின்னலும்

"புனிதம்! நீ ஏனம்மா இன்னும் தலை சீவிக்கொள்ளவில்லை? இந்தச் சேலை வேண்டாம். வேறு நல்லதாய் ஏதாவதொன்றை உடுத்துக்கொள். நேற்று வாங்கி வந்தேனே அந்த ஜார்ஜெட் ரவிக்கையைப் போட்டுக் கொள். எல்லோரும் இருந்திருந்தால் எவ்வளவோ விமரிசையாய்த்தான் நடக்கும்; அதற்காக நீ ஏனம்மா வருந்துகிறாய்? நானே எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டேன். நீ ஏன் விசனப்படுகிறாய் அம்மா! எழுந்திரு, எழுந்திரு, சீக்கிரம் போய் நிச்சய தாம்பூலம் செய்துவிட்டு வந்துவிடுவோம்'' என்று பெருமூச்சுடன் கூறினார் முதலியார்.

"இல்லை, மாமா! தலைவலி ஒரேயடியாய் மண்டையைப் பிளக்கிறது. நான் வராவிட்டால் என்ன?

சம்பந்த முதலியார் வீட்டார்கள் நமக்கென்ன புதிய வர்களா? நீங்களும் பாட்டியம்மாளும் போனால் நான் இங்கே வருகிறவர்களுக்குத் தாம்பூலம் கொடுத்துக் கொண்டிருக்கிறேனே" என்று மிகுந்த தீனஸ்வரத்து டன் கூறினாள் புனிதம். அவள் குரல் கரகரத்திருந்தது.

"சே! சே! உடம்பு சுகம் இல்லாவிட்டாலும் நீ வரத்தான் வேண்டும். நம்ம வீட்டிலிருந்து மஞ்சள் குங்குமம் எடுத்து வைக்கக்கூட ஒருவரும் இல்லையே. பார்ப்பவர்கள்தான் என்ன நினைப்பார்கள்? வந்த பிறகு கொஞ்ச நேரம் மாடியில்போய் படுத்துத் தூங்கு; எழுந்திரு" என்று சொல்லியவராய் கூடத் திற்குச் சென்றார் முதலியார். புனிதத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு சோகத்தின் சாயை அவர் மனத்தில் தோன்றி மறைந்தது.

புனிதம் எழுந்து உள்ளே சென்றாள். சேலையை எடுக்கும்பொழுதே அவள் கை நடுங்கிற்று. நெஞ்சும் மார்பும் படபட வென்று அடித்துக்கொண்டது. அழுகை மீறிக்கொண்டு வந்தது.

"ஏனம்மா!" நேரமாகிறதே. புனிதம்! கார் வந்துவிட்டதே" என்று முதலியார் உரத்த குரலில் கூப்பிடுவது கேட்டுத் திடுக்கிட்டாள். அவசரமாய் எழுந்து புறப்படச் சித்தமானாள் புனிதம். தேவானை யம்மாள் ஏதோ முணுமுணுத்தவண்ணம் வெற்றிலை, பழம் முதலியவைகளை எடுத்து வைத்துக்கொண் டிருந்தாள்.

* * *

அன்றிரவு முழுதும் புனிதம் தூங்கவே இல்லை. தணிகைவேலனின் மணக்கோலமும், அவன் முகத்தில்

தோன்றிய இள நகையும், அவள் மனத்தில் தோன்றித் தோன்றி சகிக்க முடியாத வேதனையை உண்டு பண்ணின. விஷவேகத்தினால் வருந்தும் நோயாளியின் உடல்போல் அவள் உடல் துடித்தது. பாட்டம் பாட்டமாய் மழை பெய்வதேபோல், சற்று விம்மி அழுவதும், மறுபடி சற்று அடங்குவதும், மறுபடி பொங்கி எழுவதுமாய், பரிதவித்துக் கொண்டிருந்தாள்.

அன்று பூர்ணிமை. நல்ல நிலா. நீல வானில் மெல்ல மெல்ல மிதந்து வந்துகொண்டிருந்தான் சந்திரன். நிலவின் பேரொளியினால் உலகமே மயங்கிக் கிடந்தது. எப்பொழுதும் நிலவைக் கண்டுவிட்டால் போதும். ஆனந்தமாய்ப் பட்சிபோல் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் திரிவாள் புனிதம். அன்று, அந்தச் சந்தோஷகரமான இரவில், கைகளில் முகத்தைப் புதைத்தவளாய்ப் படுத்திருந்தது, தணிகைவேலனுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணிற்று.

ஒரே வீட்டில், ஒரே இன்பமயமான நிலவில், இனிமையான வருங்கால நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்த வண்ணம் உற்சாக மிகுதியினால் தூக்கம் வராமல் தணிகு களிக்க, அதே வீட்டில், அதே நிலவில், அதற்கு நேர்மாறாக, துயர மிகுதியினால், படுக்கையில் புரண்டு புரண்டு தவித்துக்கொண்டிருக்கிறாள் புனிதம்.

"என்ன! புனிதம்! ஏன் உனக்கென்ன? உடம்பு சுகமில்லையா? தலை நோவா?" என்று கேட்டுக் கொண்டே அவள் படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்தான் தணிகைவேலன். அவள் வாயே திறக்கவில்லை.

"என்ன! புனிதம்! பேசக்கூடாதா? ஏம்மா! உனக்கென்ன செய்கிறது? சொல்லேன்" என்று

மிகுந்த பரிவுடன் கொஞ்சிக் கேட்கலானுன் தணிகை வேலன்.

புனிதம் கொஞ்சம் சமாளித்துக் கொண்டாள். "ஒன்றுமில்லை தணிகு! எவ்வளவு செல்வமும் செல்வாக்கு மிருந்தாலும் அம்மாமியும் அத்தையுமிருந்து பார்ப்பதற்கில்லையே என்று எண்ணினேன். அவ்வளவு தான், என்னையும் மீறி என் மனம் கலங்கிவிட்டது" என்று சொல்லுகையில்.....அழுகை பீறிட்டுக்கொண்டு வந்துவிட்டது. விம்மி விம்மி அழலானுள் புனிதம்.

"என்ன புனிதம்! அந்த வருத்தம் எனக்கு இல்லையா? சிறு குழந்தைபோல் அழுகிருயே? இந்த மட்டும் நீயும் பாட்டி யம்மாளுமாவது இருந்து சந்தோஷிக்கும் நிலைமையிலிருக்கிறீர்களே யென்று திருப்தி யடைவதை விட்டு, வீணுக, சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுகிருயே! இப்படி அழுதால் உடம்பு என்னத்திற்காகும்? சே, இதென்ன அசட்டுத் தனம்" என்று கூறியவனுய் அருகிலிருந்த ஒரு பெஞ்சியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

இவ்வளவு பரிவுடன் கேட்டதனுலோ என்னமோ, அவள் மனம் சற்று அமைதி யடைந்தது. ஆனுலும் தலையை நிமிராமலே, "வேறொன்றுமில்லை தணிகு. உடம்பு சரியில்லாததினுல் வெகு சீக்கிரத்தில் அழுகை வந்துவிடுகிறது. எனக்குத்தான் இன்று காலையிலிருந்தே அசாத்தியத் தலைநோவு என்று சொன்னேனே."

"அப்படியானுல் அதை இன்னும் அதிகரிக்கச் செய்துகொள்ளுகிறதற்காகவா அழுகிருய்? நீ இப்படி அழுதுகொண்டே யிருந்தால் நான் 'ஆயா'விடம் சொல்லவேண்டியதுதான். எழுந்து, கொஞ்ச நேரம்

நல்ல காற்றிலே உலாவினுல் தலைவலி குறையும். எழுந்திரு" என்ருன் தணிகு.

"நேரமாயிற்று. நீ போய்த் தூங்கு. இன்னும் சற்று நேரமானுல் என் தலை நோய் தானே தீர்ந்து விடும்........" என்பதற்குள், "அடே தணிகு! அடீ புனிதம்! இன்னுமா தூங்கவில்லை? உடம்பு என்னத் திற்காகும்? கிழவன் பேச்சைக் கிண்ணுரக்காரன் கேட்பானு? நாளைக்குக் காலைத் தலையை நொந்தால் தெரியும். என்னடா தணிகு! நடுநிசி வரையில் என்ன வம்படிக்கிருய்? நீயும் தூங்காமல் அவளையும் தூங்க விடாமல்?" என்று மிகுந்த அதிகாரத்துடன் கூறினவளாய் உள்ளே நுழைந்தாள் தேவானையம்மாள்.

"இல்லை பாட்டி, அவள் அழுதுகொண்டு படுத்திருந்தாள். என்னவென்று கேட்கலாமென்று எழுந்து வந்தேன்" என்பதற்குள், "எனக்குத் தெரியுமே, வயது வந்த பெண். தனியாய் மரத்தடிக்கும், மாடிக்கும், தோட்டத்திற்கும், போகாதே. போகாதே, என்று நூறு தடவை சொன்னேன் கேட்டால்தானே, என்ன சங்கதியோ? ஏதாவது முனி கினி, பேய் கீய் என்னத்தையாவது கண்டு பயந்து விட்டாளோ என்னமோ?" என்று ஒரே ஓட்டமாய்ப் புனிதத்தின் படுக்கையருகில் வந்து நெற்றியிலும் மார்பிலும் புறங்கையை வைத்துப் பார்க்கலானுள் தேவானையம்மாள்.

"இல்லை. எனக்கொன்றும் இல்லை. தலைநோவு தாளாமல் அழுதுவிட்டேன். வேருென்றும் இல்லை. நீங்கள் போய்த் தூங்குங்கள்" என்ருள்.

அவள் நிலைமையைக் கண்ட தேவானையம்மாள் பயந்துவிட்டாள். மகள் இறந்ததும், மருமகள் இறந்

ததும், ஒன்றன்பின் ஒன்ருய் நினைவில் வர, புனிதத்தைத் தேற்றுவதாக மனதிலெண்ணிய அவள், "அடி புனிதம் அழாதேடியம்மா! அடி என் கிளியே, என் கண்ணே!" என்று தானும் அழத் தொடங்கினுள் தேவானையம்மாள்.

"அம்மா! அம்மா! இதென்ன இது?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து வந்தார் லம்போதர முதலியார்.

"இந்தப் பெண்ணைப் பாரடா! அழுது அழுது முகம் வீங்கிக் கிடக்கிறது. அறியாதது. தனியாய் இங்கேயும் அங்கேயும் போகக்கூடாதென்று படித்துப் படித்து கிளிப்பிள்ளைக்குச் சொல்கிருப்போலச் சொன்னேன். யார் கேட்டார்கள்? இப்பொழுது ஒன்று கிடக்க ஒன்ருய் ஏதாவது வந்துசேர்ந்தால், ஐயோ முன்னேயே தெரியாமற் போயிற்றே என்று தவிக்கிறது. எல்லாம் நீ கொடுக்கிற 'செல்லம்' தான். பார் எப்படித்தானிருக்கிருளென்று. கேட்டால் ஒன்றும் சரியாய்ச் சொல்லமாட்டேனென்கிருள். நமக்கெல்லாம் இல்லாத துக்கமா இவளுக்கு. என்னமோ ஒற்றைக் கருவேப்பிலைக் குச்சி, "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" என்று உற்று உற்றுப் பார்த்துக்கொண் டிருக்கிறேன். இவளும் அழுதுகொண்டு தூங்கவே இல்லை. அந்தத் தடியனும் தூங்கவே இல்லை. மணி இரண்டு. போய்த் தூங்கடா. போடா! அடே உன்னைத்தான்" என்று ஒரே மூச்சில் கூறி முடித்தாள் தேவானையம்மாள்.

தணிகைவேலு எழுந்து மெதுவாக நடந்து, தான் படுக்கும் அறைக்குச் சென்ருன். என்னதான் தூங்க வேண்டுமென்று பலவந்தமாய்க் கண்களை மூடினு

போதிலும், தூக்கம் வந்தால்தானே? புனிதத்தைப் பற்றி நினைக்கும்பொழுதெல்லாம் இன்னதென்று விளங்காத ஒரு வேதனையினால் அவன் மனம் குழம்பிற்று. அவள் துயரம், அவன் மனத்தை வாள் கொண்டு அறுப்பதுபோல் தோன்றிற்று. அவள் தன்னிடம் வைத்துள்ள பேரன்பை எண்ண எண்ண, அவள் துன்புறுவதற்கு, தானே காரணம் என்று ஒரு சிறு மின்னொளிபோல் ஓர் எண்ணம் அவன் மனத்தில் தோன்றி மறைந்தது. ஆனால் விரிவாய் விளங்கவே இல்லை.

அத்தியாயம் 5

உதய ராகம்

வயதிலும் தணிகு மூத்தவன்தான், ஆனாலும் என்ன?... பெண் மனம் எப்படிப்பட்டதென்று புரிந்துகொள்ள அவனுக்கு சக்தியும் இல்லை, புரியவும் இல்லை. அவன் தான் என்ன செய்வான் பாவம்!

புனிதம் அன்றிரவின் பிற்பகுதியிலேயே தனது விடுதலைக்கு - தன் துயரத்தை நீக்க – ஒரு வழி கண்டு பிடித்துவிட்டாள். பரபரப்புடன் எழுந்தாள். தணிகு படுத்திருக்கும் அறைக்குச் சென்றாள். தணிகு அப்பொழுதுதான் கண் அயர்ந்திருந்தான். அடிமேலடி வைத்து, அரைத் தூக்கமும் விழிப்புமாயிருந்த அவனை எழுப்பலாமா என்று எண்ணியவளாய்ச் சற்றே தயங்கினாள்.

மணி மூன்று. விடியற் காலை. ஜாமக்கோழி கொக்கரகோ வென்று கூவிற்று. நிலவினால் தூங்கா

மல் திரியும் காக்கைகளில் சில காகா வென்று கூவி சிறகுகளைப் படபடவென்று அடித்துக்கொண்டு செல்லும் ஓசை கேட்டது.

"தணிகு! தணிகு!" என்று மிகுதியும் நடுங்கிய குரலில் மெதுவாய்க் கூப்பிட்டாள் புனிதம். அவன் அற்புதமான கனவு கண்டுகொண்டிருந்தான். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்துகொண்டிருந்தது. சற்று நிறுத்தினாள். மறுபடி அவனை உற்று நோக்கினாள். "சரிதான், தற்கொலை செய்துகொள்வதனால் என்ன உபயோகம்? உயிரை இழப்பதைவிட, வாழ்நாளைப் பிறருடைய சேவையில் ஏன் செலவு செய்யக் கூடாது?..............இந்த நிலைமையில் நான் இறந்து போனாலும், மாமாவுக்கும் தணிகைவேலனுக்கும் அபகீர்த்தியும் துன்பமுமே தவிர வேறு என்ன நன்மை? அவர் மனம்தான் என்ன பாடு படும்? இல்லை, இறந்து விடுவதென்றே வைத்துக் கொள்ளுவோம். இந்தத் துன்பங்களிலிருந்து விடுபடுவதாயெண்ணி இறந்தால், மரணத்திற்குப் பிறகு இதைவிட உயர்நிலை அல்லது அமைதி இருக்கலாமென்கிற மூட நம்பிக்கைதானே? மரணத்திற்குப் பின்........என்ன? அது ஒருவருக்குமே விளங்காத விடுகதை. அவரவர் தங்களுக்குத் தோன்றுகிறபடி வேதாந்தமோ, சமாதானமோ சொல்லுகிறார்கள். இதைவிடக் கடுமையான நிலைமை, அங்கே, மரணத்திற்குப் பிறகு ஏன் இருக்கக்கூடாது? அப்படி இருக்கும் பக்ஷத்தில் உயிர் துறப்பதனால் என்ன லாபம்? ஆசையினால், பற்றுதலினால்தானே துன்பம்? உலகைத் துறப்பதைவிட, உலகின்மேல் நமக்குள்ள பேராவலை, அதை அடைய வேண்டும் என்கிற ஆவலையே, துறந்துவிட்டால்?" என்று எண்ணும்

பொழுது, அந்தக் கனவு, அதாவது சிங்களத்தீவிலே தானும் அவனும் ஓடியதையும் கடைசியில் தான் வெற்றி பெற்றதையும் எண்ண, அவள் முகத்தில் இளநகை அரும்பிற்று. காற்றினுல் மோதுண்ட அருகிலுள்ள கோயில் துவஜஸ்தம்பத்தின் மணிகள் கலகல வென்று ஒலித்தன. "தணிகு! தணிகு!" என்ற குரல் மிகவும் மெதுவாக அவள் வாயினின்றும் எழுந்தது.

"புனிதம்! நீயா நிற்கின்ருய்? என்ன? என்று மில்லாத புன்னகை முகம் இந்த விடியற்காலையில்? அப்பாடா! எனக்குப் பெரிய பளுவு விட்டது. நீ அழுத அழுகை என் நெஞ்சையே துளைத்துவிட்டது. இரவு முழுவதும் நீ தூங்கவே இல்லையா? உட்காரு. நீ நின்றது கனவுபோலவே தோன்றிற்று. என்ன அற்புதம்? ஓர் அதிசயமான கனவு. நீ வெண் சிறகுகளுடன் பறந்து போனதுபோல. புனிதம்! அந்த அதி ஆச்சரியமான கனவிலிருந்து ஏன் விழித் தோமென்று கூடத் தோன்றிவிட்டது? என்ன ஆச்சரியம்! உண்மையில் நீ பறந்து, எங்களைப் பிரிந்து செல்லுவதுபோல் தோன்றி மயிர்க்கூச்செறிந் தது. ஆனுல்–" என்று வியப்பும் திகைப்பும் கலந்த குரலில் கூறி, சற்றே நிறுத்தினுன் தணிகு.

மேலும் தொடர்ந்து சொல்வதைக் கேட்க விரும்பாதவள்போல், "சரிதான்! சரியான தூக்க மில்லாமையாலும், பித்தம் அதிகமாவதாலுந்தான் கனவுகள் காண்கிருேம் என்று நீயே அடிக்கடி சொல்லுவாயே? நீ நெடுநேரமாய்த் தூங்கவேயில்லை. ஏதோ உளறினுற்போல் கேட்டது. அதனுல்தான்

எழுந்து வந்தேன். சரி, நீ தூங்கு" என்று சொல்லிய வளாய்த் திரும்பினுள் புனிதம்.

"தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்" என்பார்களல்லவா? நீ அறியாவிட்டாலும், உன் அந்தராத்மா ஒருவாறு அறிந்துதான் இருக்கிறது. அது கனவா? அல்ல. என் மன நிலை உன் மனதுள் பிரதிபலித்தது. தணிகு! அதைக் கண்டுகொள்ள முடியவில்லையே?" என்று எண்ணினுள். அவள் முகத்தில் சோகம் கலந்த ஒரு ஏளனப் புன்னகை ஒரு விநாடி தோன்றி மறைந்தது. "தொப்" என்று தன் படுக்கையில் உட்கார்ந்தாள் புனிதம். அந்நில வொளியில் முகத்தில் புன்னகையும் சாந்தமும் ஒருங்கே தவழ, கண்மூடி, மௌனியாய் நெடுநேரம் சாய்ந்திருந்தாள் புனிதம்.

மேளக்கார வெங்கடாசலம் 'ஙொய்' என்று ஒத்து ஊத ஆரம்பித்தான். அவன் மகன் அங்கப்பன் தன்னுலியன்ற வரையில் அபசுரத்தை வாரி வாரிக் கொட்டித் தாராளமாய் உதயராகம் வாசிக்க ஆரம் பித்தான்.

"விடிந்தும்விட்டது" என்ற சொற்றொடர் பெருமூச்சுடன் கலந்து அவள் வாயினின்றும் எழுந்து காற்றுடன் கலந்தது.

அத்தியாயம் 6

தேவானையம்மாள் கோபம்

"**அடே லம்போதரா! நானும் சொல்லிக்கொண்டேதான்** இருக்கிறேன். நீ அவள் விஷயத்தில் பராமுகமாய் இருப்பதாய் ஊரார் சொல்வதற்கு ஏன் இடம்

கொடுக்கவேண்டும்? ஏதோ காய்க்கிற நாளையிலே காய்க்கவேண்டும். பூக்கிற நாளையிலே பூக்கவேண்டும். புத்தியறிந்த பெண்ணை எத்தனை வருஷந்தான் வீட்டிலேயே வைத்திருப்பது? ஏதோ நான் ஒரு கட்டை இருக்கும்பொழுதே ஒரு தாலியைக் கட்டிவிட்டால் பிறகு எப்படியாவது போகட்டும். அவளைவிட மூன்று வயது இளையவள் சிவகாமி. இதற்குள் இரண்டு குழந்தைகளுக்குத் தாயராகிவிட்டாள். இவளுக்குமட்டு மென்ன இப் பிடிவாதம்?........

"இப்படியே இருந்து விடுகிறேன் என்கிருள். நீயும் ஒன்றும் சொல்லுவதில்லை. அதெல்லாம் சரியான காரியமா? இப்பொழுது சொல்லிவிடலாம். முட்ட முடிய நடந்து நாலு பேர் தோளில் போகிற வரையில் நடந்த பிறகல்லவா? இதெல்லாம் வெறும் அதனப் பிரசங்கித்தனம். நானும் போய்விட்டால் ஏனென்று கேட்பாருமில்லை...........

"வீட்டிலேயோ அவளும் சிறியவள். இவளும் சிறியவள். நான் என்ன, கல்பகோடி காலம் வரம் வாங்கி வந்திருக்கிறேனு? பச்சைப் பசுக்க வாழ வேண்டிய என் கண்மணிகளெல்லாம் பாதி வயதிலே படை எடுத்துப் போனுர்களே! நான் இருப்பது என்ன சாசுவதம்? வீடு போ போ என்கிறது, காடு வா வா என்கிறது. ஏதோ, கண்ணுள்ளபோதே ஒரு வரனை நிச்சயம் செய்துவிட்டேன். நீயே நேரில் அவளைக் கேள். நான் சொன்னுல் பக்கத்து வீட்டுப் பாப்பாத்தியை உபமானம் சொல்லுவாள். உலகத்திலே நல்லதும் கெட்டதும் கலந்துதான் இருக்கும். நன்ரு யிருப்பவர்களைத்தான் பார்த்துக்கொள்ளக்

கூடாதா?" என்று தேவானையம்மாள் வெகு சாவதானமாக மகனிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"ஏன்? என்ன சங்கதி?" என்று கேட்ட வண்ணம் உள்ளே நுழைந்தார் தணிகைவேலனின் மாமனுர் சம்பந்த முதலியார். அவரை அடுத்து சிங்காரவேலு முதலியாரும் உள்ளே நுழைந்தார். அவர்கள் தேவானையம்மாளின் பேச்சு முழுமையையும் கேட்டுவிட்டே உள்ளே நுழைந்தவர்களாகையால் நின்றபடியே, "ஏனம்மா! நீங்கள் பெரியவர்கள்; அதிலும் ஆயிரம் பாடு அரும்பாடு பட்டு வளர்த்தவர்கள். நீங்கள் சொல்லுவதைவிட அவர் என்ன அதிகமாய்ச் சொல்லக் கிடக்கிறது? உங்கள் வரையில் அவள் என்னதான் சொல்லுகிருள்? ஒருவேளை மனத்தில் யாரையாவது நிச்சயித்துக்கொண்டு சொல்வதற்கு வெட்கப்பட்டுக் கொண்டுதான் இப்படி வேதாந்தம் பேசுகிருளோ என்னமோ? அதைக் கொஞ்சம் சிவகாமியிடம் சொல்லி விசாரிக்கச் சொல்லுங்களேன். அந்தக் காலத்திலேயே, என் மனைவி எனக்கு முறைப் பெண்ணுயிற்றே. அவளை இவனுக்கு, சிங்காரத்துக்குக் கொடுப்பதாக நிச்சயம் செய்து பரியங்கூட போட்டாயிற்று. அடுப்பங் கரையில், "அத்தானுக்குக் கொடுத்தால் கொடு. இல்லாவிட்டால் கிணற்றிலே விழுந்துவிடுவேன்" என்று எழுதி வைத்தாளாம். அவளுக்கு ஆனு ஆவன்னு தான் தெரியும். அவளே எழுதி வைத்தபொழுது இவள் கெட்டிக்காரி மனதிலேயே வைத்துக்கொண்டு தான் வேதாந்தம் பேசுகிருளோ என்னமோ? ரகசியமாய் விசாரித்துத்தான் பாருங்களேன்" என்ருர் சம்பந்த முதலியார்.

"அதென்ன கதையோ? கேட்டால் ஏதாவது சமாதானம் சொல்லுகிருள். அந்தச் சமயத்தில் அவள் சொல்லுவதைக் கேட்டால் அதுவே சரி என்று தோன்றுகிறது. எனக்கு இந்தப் பெண்ணின் கவலே தான் பெருங்கவலேயாய்ப் போயிற்று. ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டால் சற்று நிம்மதி யாய்க் கண்ணே மூடுவேன்" என்று பெருமூச்செறிந் தாள் தேவானேயம்மாள்.

"ஒரு காரியம் செய்யுங்கள். என் மகன் சுந்தர மூர்த்திக்குப் பெண் கேட்கத்தான் இன்று வந்தேன் என்று சொல்லுங்கள். அதற்கு என்ன பதில் சொல்லு கிருளென்று பார்ப்போம். நம்ம சாதியிலேதான் 'ஏழு செருப்புத் தேயவேண்டும்' என்று சொல்லுவார் களே" என்ருர் சிங்கார முதலியார்.

"அடே சிங்காரம்! அவள் பேசுகிற பேச்சைக் கேட்டாயானுல், நீ இந்தமாதிரி யுக்தி சொல்லிக் கொடுக்க மாட்டாய். கல்யாண சங்கதி கிடக்கட்டும். நகை நட்டு, துணி, மணி எல்லாவற்றையுமேதான் வேண்டாம் வேண்டாம் என்கிருள். எது வாங்கலா மென்று கேட்டாலும் எனக்கு வேண்டாம். சிவ காமிக்கு வேணுமானுல் வாங்குங்கள் என்கிருள். போதும் போதாததற்கு அந்த 'காந்தி'யாமே, யாரோ — அந்தக் கிழடு அதைச் சொல்லுகிறது; இதைச் சொல்லுகிறது என்று ஓயாமற் சொல்ல ஆரம்பித்து விடுகிருள். கதர் கதர் என்று ஒரு துப்பட்டியைக் கட்டிக்கொண்டு நிற்கிருள். பணமில்லேயா? காசு இல்லேயா? நல்லதாய் சிலுக்கும் பிலுக்கும் கடை களிலே கொட்டிக் கிடக்கிறது. அதெல்லாம் கூடா தாம். தென்னே மரத்தைக் குத்தகைக்கு (கள் குத்த

கைக்கு) விடக் கூடாதாம். மாதம் நம்ம தோப்பி லிருந்து 3000 ரூபா வரவு. அது பாவமாம். அதற்கு உபமானம் பாப்பாத்தியையும் சிவக்கொழுந்தையும் சொல்லுகிருள். என்னமோ இந்தக் காலத்தி லேயே எல்லாம் தாந்தோன்றிகளாய்விட்டது. இதெல் லாம் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்ததனுல் வந்த அநர்த்தம். இவள்தான் உலகத்தையே புரட்டி- குடியையே ஒழித்துவிடப் போகிருளாம். கூட்டங் கூடி குடிக்கக் கூடாதென்று கூவுகிற தடியன்கள் எல்லோரும் சட்டைக்காரச்சிகளோடு ஓட்டல்களில் பீப்பாய் பீப்பாயாக உருட்டுகிருன்கள். வீட்டிலேயே ரகசியமாய்க் குடிக்கிறவன்கள் மருந்து, மருந்து என்று பீரோவிலே பூட்டிவைத்துக்கொண்டு குடிக் கிருன்கள். நம்ம தோப்புக் குத்தகையை நிறுத்தி விட்டால் உடனே குடியே ஒழிந்து போய்விடுமோ? கள்ளு சாராயக்கடைக ளெல்லாம் மூடி விடுவார் களாம். எல்லோரும் வீர சைவமாய், குடிக்காமலும், கறி தின்னுமலும், தீக்ஷைபண்ணிக்கப் போகிருர் களோ? சோற்றிலே கிடக்கிற கல்லைப் பொருக்கத் தெரியாதவர்கள் சொக்கனுதன் கோயில் மதில் கல்லைப் புரட்டி வைத்துவிடுவார்கள்! எல்லாம் இந்தப் பள்ளிக்கூடத்திஞல் வந்த அனர்த்தம்" என்று மிகுந்த கோபத்துடன் சொல்லி நிறுத்திஞள் தேவானை யம்மாள்.

அப்படியே திகைத்துப் போய்விட்டார் சிங்கார முதலியார். என்ன பதில் சொல்லுவது என்று அவ ருக்கு விளங்கவில்லை. அவளுக்குப் பரிவாய், தாடன் பேசப் போகத் தன்னையே ஒரு உலுக்கல் உலுக்கி விட்ட தேவானையம்மாளின் வார்த்தைகளுக்குப் பதில்

பேசலாமா வேண்டாமா என்று தவிப்பதைக் கண்டு சம்பந்த முதலியார், மிகவும் தணிந்த குரலில், "அம்மா, நீங்கள் சிங்காரத்தையே புனிதம் என்று எண்ணிவிட்டீர்கள் போலிருக்கிறது. நீங்கள்தானே அவளுக்கு அருமையாய், புனிதவதியாரின் பெயரை இட்டீர்கள். பெயரளவிற்குக் கொஞ்சம் மரியாதை வேண்டாமா? அதனுல்தான் துறவிபோல்" – என்பதற்குள்....

"அடே சம்பந்தம்! உனக்கு இங்கே கோமாளி வேஷம் கொடுக்கவில்லை. இந்த வேதாந்தம் எல்லாம் உன்னை யார் கேட்டார்கள்? ஏதோ கொண்டு கொடுத்து 'சம்பந்தி வேட்டை' யாடினவனுயிற்றே என்று கேட்டால், கோமாளித்தனமாய்ப் பதில் சொல்லுகிறுயா? இன்னும் சிறு குழந்தை என்று எண்ணமோ? அகம்பாவமோ? நன்ருயிருக்கிறது" என்று சீறினுள் தேவானையம்மாள்.

இதற்குள் லம்போதர முதலியார், "அம்மா! அவர் கிடக்கட்டும். ஏதோ வேடிக்கையாய்ச் சொன்னுல் நீ கோபிக்கலாமா? புனிதம் காலேஜிலிருந்து வரும் நேரமாயிற்று. வந்துவிடப் போகிறுள். பிறகு ஏதாவது வருத்தப்பட்டுக் கொள்ளும். நான் மெதுவாய் இன்று கேட்டுவிடுகிறேன். சம்பந்தம்! நீயும் சிவகாமியிடம் சொல்லிவை." என்றுர்.

இதற்கிடையில் சிவகாமியின் சிறு குழந்தை பொன்னையன் சம்பந்த முதலியாரிடம் சென்று அவரைத் துவைக்கலானுன். பெரிய பெண் கற்பகம், 'எங்க ஆயா உனக்கில்லை' என்று ராகம் போட்டுப் பாடியவண்ணம் தேவானையம்மாளை யானையாடுவது போல் அசைக்கத் தொடங்கினுள்.

அதுவரையில் சீறிக்கொண்டிருந்த தேவானை யம்மாளின் கோபம் ஓடி ஒளிந்தது. "ராஜா வாடா, என் செல்வம் வாடா" என்று தழுதழுத்த குரலில் கூறியவளாய் பேத்தியை இழுத்து மடியில் வைத்துக் கொண்டாள். பொக்கை வாய்ப் பற்களில் மூன்று வெளியில் தெரிந்தன.

அத்தியாயம் 7

வி ர க் தி

அன்றிரவு சாப்பிடும்போது கல்யாணப் பேச்சு எடுத்தார் முதலியார். முதலியாரும் தணிகுவும் தேவானை யம்மாளும், பேசியபடியே சாப்பிட, புனிதம் பரிமாறிக் கொண்டிருந்தாள். சிவகாமி குழந்தை பொன்னையனைத் தூங்கவைத்துக் கொண்டிருந்தாள். கல்யாண விஷயத்தைப்பற்றி இவர்கள் எவ்வளவோ பேசியும் அவள் ஒன்றிலும் ஒட்டாமல் ஏதோ பதில் சொல்லிக்கொண்டே இருந்தாள். அவள் மனத்தில் தாங்க ஒண்ணாத துயரம் தோன்றுவதைக் கண்டு விட்டார் முதலியார்.

பளிச்சென்று மின்னல்போல் ஒரு நொடியில் அவருக்கு விஷயம் விளங்கிவிட்டது. இவ்வளவு நாளாய்ப் புரியாத விடுகதை இப்பொழுதே அவர் மூளைக் கெட்டிற்று. தன்னைத் தானே இகழ்ந்து கொண்டார். தன் மன நிலையை வெளியில் காண்பித்துக் கொள்ளக் கூடாதென்று எண்ணியவராய் வேறு எதையோ பேசலானார்.

புனிதமும் சிவகாமியும் உட்கார்ந்து பேசிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தார்கள். சிவகாமி

நன் தகப்பனார் சொல்லியிருந்த, கற்றுக்கொடுத்த பாடங்களை யெல்லாம் ஒப்பித்தாள். அவை ஒவ்வொன்றிற்கும் அவளுக்குச் சரியான பதில்களைச் சொல்லிக் கொண்டே வந்தாள் புனிதம். அவளுக்குமேல் பேசத் தெரியவில்லை. "அக்கா! அதுதான் வக்கீலுக்குப் படிச்சதை நீங்கள் படித்திருக்கலாம்" என்று கபடமற்று கலகலவென்று சிரித்துக்கொண்டே சொன்னாள் சிவகாமி.

" படித்திருக்கலாமென்ன? படித்தால் போயிற்று. மேல வருஷம் லா காலேஜிற்கு மனுப் போடட்டுமா?" என்றாள் புனிதம். " ஐய்யய்யோ? பாட்டியம்மா காதிலே பட்டால்........" என்று சிரித்தாள் சிவகாமி.

சிவகாமி பலமுறை தணிகைவேலனிடம் புனிதத்தின் விவாக விஷயமாகவோ, அல்லது பொதுவாகவோ கேட்பாள். அதில் ஒரு கேள்விக்காவது சரியானபடி பதில் சொல்ல அவனால் முடியாது. ஆனால் பொதுவாக, புனிதத்தைக் காணுவிடில் எங்கே எங்கே என்பான். புதிதாய் வந்தபொழுது சிவகாமி இதைப் பற்றிக் கொஞ்சம் விபரீதமாய் சந்தேகப் பட்டதும் உண்டு.

வீண் சந்தேகம், ஆதாரமற்ற சந்தேகங்கள் எவ்வளவு நாள் நிற்கமுடியும்? நாள் செல்லச் செல்ல, புனிதத்தை ஒரு கடவுளாய்க் கருதிவிட்டாள் சிவகாமி. சொற்களாலும் செயலாலுமல்ல, தனது மெய்யன்பினாலேயே அந்தப் பெண்ணின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டாள் புனிதம். அவள் தனக்குச் சொல்லும் புத்திமதிகளும் உபசரணைகளும் தனக்கும் தன் கணவனுக்கும் குழந்தைகளுக்குமாக எல்லையற்ற உள்ளன்

புடனும், பரிவுடனும் பாடுபடுவதும் சிவகாமியின் மனத்தைக் கொள்ளைகொண்டன.

'அக்கா! அக்கா!' என்று எந்தச் சிறு வேலையையும் கூட அவள் அனுமதி பெருமல் செய்யமாட்டாள். "அக்கா! இன்று எந்தச் சேலை உடுத்திக் கொள்ளட்டும்?" என்று கேட்பாள். அவளைக் கேட்பதனுல் தனக்குத் திருப்தியும் ஆனந்தமும் ஏற்படுவது எதனுல் என்று சிவகாமி பல முறை சிந்தித்ததுண்டு.

"அக்காவுக்கு அவருடைய குணம் நன்ருய்த் தெரிந்திருக்கிறது. அவருக்கு எது விருப்பம், எது வெறுப்பு என்று கூட நன்ருய்த் தெரிந்து வைத்திருக்கிருர். குழந்தைப் பருவம் முதல் பழகியதல்லவா? அவர் எண்ணுவதையும் எண்ணப் போவதையும் கூடச் சொல்லிவிடுகிருரே. உண்மையில் அவர் இவ்வளவு பரிவுடன் ஒவ்வொன்றையும் எடுத்துச் சொல்லித் திருத்தாவிட்டால், என் கோபத்திற்கு ஒருநாள் கூட இந்த வீட்டில் வாழமுடியாது. அவருடைய உதவியும் புத்திமதியுமில்லாமல் நான் தனித்திருந்தால் தெரியும், படும் பாடு. என்னுல் பொறுத்து ஒரு நிமிஷம் ஏதேனும் செய்யமுடியுமா? படபடவென்று கோபித்து வீண் வசைகளையும் வெறுப்பையுந்தான் அடைந்திருப்பேன். இதற்காக அக்காவுக்கு என் தோலையே செருப்பாய்த் தைத்துப் போடவேண்டாமா?" என்று தானே சொல்லிக் கொள்ளுவாள் சிவகாமி.

சம்பந்த முதலியாரும் அவர் மனைவியுங் கூட "அம்மா! புனிதம் தங்கமான பெண். உன் சிடுசிடுப்பை அவளிடம் காட்டிவிடாதே. அவளைப்போல் உன்னுல் ஒரு நிமிஷம் இருக்கமுடியுமா? அவள் எப்படி தக்கார்க்

குத் தக்கபடி நடக்கிருள் பார். அவளைப்போல் நல்ல பெயரெடுத்துக்கொள். உன் படபடப்பை அங்கே காண்பித்தாயோ, பிறகு அந்த வீட்டு வழியே நாங்கள் வரவே மாட்டோம்" என்று, தான் புக்ககம் வருமுன் எச்சரித்ததை நினைத்துக்கொள்வாள்.

அன்றிரவு வெகுநேரம் வரையில் கல்யாண விஷயமாய், தானும் புனிதமும் பேசிக் கொண்டிருந்ததைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள். பாவம், தணிகு தன்னுலான வரையிற் சிந்தித்துப் பார்த்தான். புனிதத்தின் குணத்தையும், அவள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாறுதல்களையும்பற்றி அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எப்படி விளங்கும்?

"அக்கா! நீங்கள் ஏன் ஒருநாள்கூட சரிகைச் சேலை கட்டிக்கொள்ளவே மாட்டேனென்கிறீர்கள்? புதியதாய் வாங்காவிட்டாலும் போகிறது. இருப்பவைகளையாவது கட்டிக்கொள்ளக்கூடாதா? பெட்டியில் வைத்துப் பூச்சி அரித்து வீணுய்ப்போகிறதே. நூறு நூருய்க் கொட்டி வாங்கி வீணுய் மக்கிப் போவதில் என்ன லாபம்? இன்று நீங்கள் உமாபதி முதலியார் வீட்டுப் பூமுடிப்புக்குக் கராச்சி சேலைதான் உடுத்துக்கொண்டு வரவேண்டும். என்னை மட்டும், இதை வாங்கிக்கொண்டால் நன்ருயிருக்கும், அது அழகாயிருக்கிறது, அவருக்குப் பிடிக்கும் என்று சிபார்சு செய்கிறீர்களே" என்று கேட்டாள் சிவகாமி.

நீயும் என்னைப்போலவே கதர் உடுப்பதானுல் எனக்குச் சந்தோஷந்தான். மாமாவுக்கும் தணிகுவுக்கும் நீ விதவிதமான அலங்காரங்கள் செய்துகொள்ள வேண்டுமென்று விருப்பமிருக்கலாம். நேற்றுக்கூடத் தணிகு ஆகாச வர்ணத்தில் கறுப்புக்கரைச் சேலை

நன்றாயிருக்கிறது என்று எடுத்துவைக்கவில்லையா? அவனுக்கு இஷ்டமிருப்பதை ஒட்டித்தானே நீ நடக்க வேண்டும்? அதனால் உன்னைக் கதர் உடுத்தும்படி நான் வற்புறுத்தவில்லை. கொஞ்சம் போனால் அவனுக்கே கதர்ச்சேலை வாங்கவேண்டுமென்று தோன்றினாலும் தோன்றலாம்.

"மொத்தத்தில் பட்டு உடுத்துவது ஜீவஹிம்ஸை தானே? ஒரு புடைவை அழகுக்காக நாம் உடுத்துவதற்கு எத்தனை கோடி பட்டுப்பூச்சிகள் சாகவேண்டும் தெரியுமா? கேவலம் அந்தப் பளபளப்பிலேதான் மயக்கம். பட்டு மடி, யோசித்துப் பார்த்தால் வெறும் பிரமைதான். நீயே சொல். நூறாயிரம் பூச்சிகளைக் கொன்று செய்த ஒரு பொருள் எப்படி மடி யாகும்? என்ன விதத்தினால் பருத்தியைவிட உயர்வு?"............ என்று சொல்லிக்கொண் டிருக்கையில்........" அடியே சிவகாமு, என்ன கொட்டமடிக்கிறீர்கள்? குழந்தை அழுகிறானே, காது கேட்கவில்லையா?" என்று தேவானையம்மாளின் குரல் கேட்டது.

சிவகாமு ஒரே ஓட்டமாய் ஓடிக் குழந்தையை எடுத்துத் தோளில் சாத்தியவளாய், "அது சரிதான். எனக்கு மட்டும் அந்த நியாயமெல்லாம் கிடையாதா?" என்றாள்.

"உன் சங்கதி வேறு. அவனுக்குத்தான் உடையிலும் வீண் ஆடம்பரத்திலும் அசாத்யப் பைத்திய மாயிற்றே? நீ ஏதாவது சொன்னாயோ உன்னை நான் கெடுத்துவிட்டேன். என்பான். என் விஷயத்தில் அப்படிப்பட்ட . அவசியங்கள் ஒன்றுமில்லை. என் இஷ்டப்படி நடந்து கொள்ளலாம்" என்று நிறுத்தினாள் புனிதம்.

"ஆமாம், அக்கா! உங்களுடன் வாதிப்பதற்கு எனக்கென்ன தெரியும்? சொல்லுவதை யெல்லாம் ஆமாம், ஆமாம் என்று தலையசைத்துக் கேட்டுக் கொண்டிருப்பேன். வேறு எனக்கென்ன சொல்லத் தெரியும்?" என்று கூறியவளாய், குழந்தையைத் தூக்கிப் புனிதத்தின் மடியின்மேல் வைத்துவிட்டு உட்கார்ந்தாள் சிவகாமு.

"சிவகாமி, இங்கே பார்! இந்தப் பயலைக் குண்டோதரன் என்று கூப்பிடட்டுமா?"

"எப்படித் தோன்றுகிறதோ அப்படிக் கூப்பிடுங் களேன்."

"இல்லை. மாமாவை சிவபாத முதலியார் குண்டோதரன் என்றுதான் கூப்பிடுவார். இல்லா விட்டால் 'வெற்றிலை' என்று கூப்பிடட்டுமா? அது இலக்கணத்தில் வெள் இலை என்று விரியும்" என்று விஷமச் சிரிப்புடன் சொன்னாள் புனிதம்.

"ஐயையோ! மாமா வரப்போகிறார்கள்" என்று சிவகாமு சொல்லுகையில், "ஜேய் சீதாராம். சூரிய பகவான், சந்திர பகவான், அகஸ்திய பகவான்" என்று கூவிக்கொண்டே வந்தாள் கற்பகம்.

"அடே ராமா! இன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் இந்தப் பாடந்தானா? இங்கே வா, அம்மா" என்று சொல்லிக்கொண்டே கற்பகத்தை அருகே அழைத்து அணைத்தவண்ணம் முன்னெற்றியில் தொங்கும் குழலைக் கோதிவிட்டாள் புனிதம்.

அவள் தன் கையிலிருந்த சிறு சொப்பில் குங்கு மத்தை எடுத்து, "எங்காத்திலே பொம்மைக் கல்யா ணம். நீங்கள் எல்லோரும் கட்டாயம் வரவேண்டும்" என்று அழைத்தாள்.

குழந்தை லம்போதரன் தனது ஊமை வார்த்தைகளால் அந்தச் சொப்பைத் தனக்குக் கொடுக்கும்படி கெஞ்சிக் கேட்கலானுன். அவனது செய்கைகளின் கருத்து விளங்காதவளாய் சிவகாமி "அக்கா! இப்படிக் குதிக்கிருனே. நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். யானை கட்டிய தரியாய் என்னை ஆக்கி விடுகிருனே" என்று மீண்டும் புனிதத்தினிடம் கொடுத்தாள்.

"அவனைக் கீழே விடு. என்ன செய்கிருன் பார்ப்போம்" என்ருள் புனிதம்.

அவ்வளவுதான்; ஒரே தாவலாய்த் தாவி, சொப்பு காகிதம் எல்லாவற்றையும் ஒருங்கே பறித்துக்கொண்டான் குழந்தை. இதற்குள் தணிகைவேலன் வர, சொப்புக்கள் போனதையும் பொருட்படுத்தாதவளாய் "அப்பா வந்துவிட்டார்" என்று குதித்துக்கொண்டே ஓடினுள் கற்பகம்.

அத்தியாயம் 8

புயற் காற்று

நாட்கள் சென்றன. வருஷங்கள் ஐந்தாயின. லம்போதர முதலியார் எப்பொழுதும்போல்தான் இருக்கிருர். வீடும் முன் இருந்ததுபோலவேதான் இருக்கிறது. தணிகைவேலனும் முன்னிலும் பன்மடங்கு அழகிய காளையாய்க் காணப்படுகிருன். தேவானையம்மாள் கூனிக் குறுகிக் கோல்பிடித்து நடந்துகொண்டிருக்கிருள். புனிதம் அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் அதே கோலத்தில்தான் இருக்கிருள்.

கற்பகம் வயது பத்தேயாஞலும் வெள்ளரிப் பிஞ்சுபோல் வளர்ந்திருக்கிருள். நடுக்கூடத்தில் ஒரு

கருங்காலிக் கட்டிலிற் படுத்திருக்கிருள் சிவகாமி. தொட்டிலில் ஒரு சிறு குழந்தை கைவிரல்களை வாயில் வைத்துச் சப்பியவண்ணம் கைகால்களை உதைத்த வண்ணம் படுத்திருந்தது.

அதையடுத்து மற்ருெரு தொட்டிலில் அதே சாயலாய் இன்ெனாரு குழந்தை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது. கட்டிலிற் படுத்திருப்பவள் சிவகாமிதான் என்பதை முகச்சாயலினுலும் குரலினுலும் தான் கண்டுகொள்ள முடியுமேயன்றி, சாதாரணமாய்ப் பார்த்தவுடன் தெரிந்துகொள்ள முடியாது. அவள் அவ்வளவு உருமாறி இளைத்து மெலிந்து கிடந்தாள்.

அடுத்து ஒரு சிறு மேஜையில் மருந்துகளும் மற்றும் வேண்டிய பொருள்களும் வைக்கப்பட்டிருந்தன எதிரிலிருந்த மற்ருெரு நாற்காலியில் விசனமே உருவெடுத்து வந்தாற்போல் உட்கார்ந்திருந்தாள் புனிதம்.

உடல் மட்டும் உட்கார்ந்திருந்தது. ஆனுல் எண்ணங்கள் எங்கேயோ ஓரிடத்தில் ஈடுபட்டிருந்தன.

"ஆண்டவனே, ஒன்றுக்கும் உதவாத நான் இறந்தாலும் குற்றமில்லை. இந்தப் பச்சைக் குழந்தைகளுக்காக அவளுக்கு உயிர்ப்பிச்சை போடக்கூடாதா? அந்தக் காலததில் பாபர் சக்கரவர்த்தி மகனுக்காக உயிரைக் கொடுத்தார் என்று சொல்லுவார்கள். நான் இந்த க்ஷணத்திலேயே என் உயிரை வேண்டுமானுலும் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன். நான் இறந்து போனுல் ஒருவருக்கும் ஒன்றும் கஷ்டமில்லை. அவள் இறந்தால் குடும்பம் தத்தளித்துப் போய்விடும். நான்கு குழந்தைகளையும் வைத்துக்கொண்டு என்ன செய்

வாள் பாவம்! அப்பனுக்குப் பிள்ளை தப்பாது பிறந் தான் என்று இவனுக்கும் இந்த வயதிலேயே அப்படி நேர்ந்துவிடுமோ? மாமாவுக்கு ஒருவிதம், அம்மாவுக்கு ஒருவிதம், என் சங்கதி வேறொருவிதம். இவன் ஒருவனு வது நன்ருய்ப் பச்சென்றிருக்கலாகாதா?........இந்த மூன்று வருஷமாய் இந்தப் பேதை சிவகாமிக்காக என்ன பாடு பட்டேன்? இந்தக் குழந்தைகளுக்காக என்ன பாடு பட்டேன்? என் கண்மணிகள் என்னைப் போலவே தாயற்றுத் தவித்துவிடுமோ? ஆனமட்டும் சொன்னேனே, கேட்டாளா? உலகத்தில் யாருக்குத் தான் தாயார் இறந்துபோக வில்லை? கேட்காமல், அழு தும் தூக்கம் விழித்துமன்ருே உடம்பைக் குட்டிச்சுவ ராய் அடித்துக்கொண்டாள்?" என்று தனக்குள்ளே எண்ணமிட்டவளாய் உட்கார்ந்திருக்கையில், "அக்கா, பால்!" என்று கேட்டுவிட்டு வரண்ட தன் உதடுகளை நாவிஞல் தடவிக்கொண்டாள் சிவகாமி.

பாலை எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாய் புனிதம் அவளுக்குக் கொடுத்துவிட்டு, கைகளைச் சுத்தம் செய்துகொண்டு, சிறு குழந்தையைக் கையிலெடுத்த வளாய் சற்றுத் தொலைவிலுள்ள ஒரு பெஞ்சியில் உட்கார்ந்தாள்.

சிவகாமி மெதுவாய் ஒருக்களித்துக் குழந்தை யைக் கவனிக்கலாஞள். அச்சிறு குழந்தை நெடு நேரம் அவளை ஊன்றிப் பார்த்துவிட்டுத் தன் ஊமை வார்த்தைகளால் 'ஊம்' என்றது. சிவகாமி தன் மனத்துள் பொங்கியெழும் ஆனந்தத்தை வெளியே காண்பித்துக் கொள்ள வெட்கிஞள். வரண்டு உலர்ந்து கிடந்த அவள் இதழ்களில் இளநகை அரும்பிற்று.

குழந்தை அவளை உற்று நோக்குவதையும் அவள் நகைப்பையும் கண்ட புனிதத்திற்கு நெஞ்சு படீர் படீரென்று அடித்துக்கொள்ளத் தொடங்கிற்று. இன்னதென்று சொல்லமுடியாத ஒருவித வேதனையி ஞல் அவள் தவிக்கலாஞள். கண்களினின்றும் கண் ணீர் மாலை மாலையாய்ப் பெருகி அவள் சேலையை நனைத்தது. அதை மறைக்கும்பொருட்டு எதையோ பார்ப்பவள்போல் மறுபுறம் திரும்பிஞள். சிவகாமி யின் கண்கள் அவள் கண்களைச் சந்தித்தன.

" அக்கா ! அக்கா ! ஏன் அழுகிறீர்கள் " என்று கேட்டுவிட்டாள் சிவகாமி. சற்று நேரம் நிசப்தம். மிகவும் மெல்லிய பலஹீனமான குரலில், " அக்கா ! நான் பிழைக்கமாட்டேஞே ? நான் ஒன்றுக்கும் பயப் படவில்லை" என்று கெஞ்சிக்கேட்டாள் சிவகாமி.

" சரிதான், தாறுமாருய் உளருதே. உனக்கொன் றும் பயமில்லை " என்ருள் புனிதம்.

" அக்கா ! நான் கேட்கிறேனே என்று கோபிக் காதேயுங்கள். எனக்குச் சாவைப்பற்றிப் பயமில்லை. ஆனல்...ஆனல் அவரை விட்டுவிட்டு இறந்துபோகத் தான் மனமில்லை. ஒருவேளை நான் இறந்தாலும் என் குழந்தைகளை மாற்ருந்தாயின் கொடுமைகளுக்கு ஆளாக்காமல் நீங்களே கவனித்துக் கொள்ளுவீர்களா? இதுவரையில் நானே கவனித்து வந்தேன். என்ருலும் ஒரு வேளை உங்கள் கணவர் உங்களைக் குழந்தைகளிட மிருந்து பிரிக்கலாம். அல்லது என் குழந்தைகளுக்கு சிச்ருஷை செய்வது அவருக்குப் பிடிக்காமலிருந்தாலு மிருக்கலாம்........தவிர அவரை இந்த விஷயத்தில் நம்ப முடியாது. தாயில்லாத் தகப்பன் தாயாதி என் பது உலக வழக்கு. நம்பிஞல் உங்களைத்தான் நம்ப

வேண்டும்" என்று சொல்லுகையில்........குரல் தழ தழத்தது. கண்ணீர் மாலை மாலையாய்ப் பெருகி ஓடிற்று.

"அடி சிவகாமி, இதென்ன குருட்டு யோசனை ? சற்று நிம்மதியாய்த் தூங்கினால்தான் உடம்பு சுக மாகும். தூங்கு !" என்றாள்.

சிவகாமி அவள் கையைப் பிடித்த பிடியை விடவே யில்லை. ஏதோ ஒரு காந்த சக்தி உடலில் ஊடுருவு வது போல் தோன்றிற்று. புனிதம் மெதுவாய் அவன் கையை எடுக்க அவள் கைகளும் உதடுகளும் கண்ணி மைகூட படபடவென்று நடுங்குவதைக் கண்டாள்.

அதே சமயத்தில் டாக்டரும் தணிகைவேலனும் உள்ளே நுழைந்தார்கள்.

* * * *

"அறியாப் பெண். பிள்ளைத் தாய்ச்சி. பீச்சுக்கும் கீச்சுக்கும் போகவேண்டா மென்றால் கேட்டீர்களா ? இது இரத்தக் காட்டேரிதான். அதுதான் ஒரே மட் டாய் இரத்தத்தையே குடித்துவிட்டது. பச்சைப் பிள்ளைக்காரிகளுக் கெல்லாம் நாட்டு மருந்துதான் இடுப்புக்கு வலுவு. இந்தப் பாழும் பச்சைத்தண்ணீ ரும் நிலத்தண்ணீரும் வேண்டாம். எதாவது நல்ல லேகியம் கஷாயம் ஏதாவது கொடுங்கள் என்று முட்டிக்கொண்டேனே. கேட்டீர்களா ? தாண்டவ ராயப் பிள்ளை நல்ல கைராசிக்காரன். எப்பேர்ப்பட்ட இரத்த சோகை எல்லாம் ஆட்டுப்பாலில் மூன்று வேளை மருந்து கொடுத்துக் குணப்படுத்தி விடுவான். அதெல்லாம் இவர்கள் சட்டை செய்வார்களா ? என் அம்மணி ! தாயே ! முண்டக்கண்ணியம்மா ! ஏழுமலை

யானே! நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று ஒவ்வொரு தெய்வங்களாகவே வேண்டிக்கொண்டிருந்தாள் தேவானையம்மாள்.

தணிகைவேலன் அவள் அருகில் உட்கார்ந்திருந்தான். புனிதம் மறுபுறம் உட்காருவதும் எழுவதுமாய் இருந்தாள். டாக்டர் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படி எச்சரித்தார். ஒரு ஸ்பெஷல் நர்ஸ் ஏற்படுத்தப்பட்டாள்.

* * * *

இரவு மணி ஏழு. சிவகாமி படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள். தணிகைவேலன் ஒரே கற்சிலையாய் நின்றுகொண்டிருந்தான். புனிதம் பித்துப் பிடித்தவள்போல் இங்குமங்கும் அலைந்துகொண்டிருந்தாள். முதலியார் உள்ளுக்கும் வாயிலுக்குமாய் நடந்துகொண்டிருந்தார். சம்பந்த முதலியார் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்திருந்தன. அசையாமல் ஒரு நாற்காலியில் சாய்ந்து கிடந்தார்.

காய்ந்து கருகிய மலர்போல் வற்றி வரண்டு கிடந்த சிவகாமு உடல் வேதனையைத் தாளாமல் தவிக்கலானாள். அப்பா! அம்மா! என்று அவள் முனகிய குரல் அந்த நிசப்தமான இரவில் எல்லோர் உள்ளத்தையும் ஒருங்கே கலக்கிற்று. மருள மருள அவள் விழித்த விழி நிரம்பவும் பயங்கரமாய், இன்னதென்று விவரிக்க இயலாத பேரச்சத்தை உண்டு பண்ணிற்று.

பன்னிரண்டு மணி தாண்டிவிட்டால் ஒரு பயமும் இல்லை. ஜன்ம நட்சத்திரம்; அமாவாசை; பாதி இரவு கழிந்துவிட்டால் பயமில்லை என்றார் தண்டரை

சோதிடர். டாக்டர் தாதுவைப் பார்த்துவிட்டு மறுபடி "இஞ்செக்ஷன்" செய்தார்.

நடு நிசி. சீறு சீறென்று புயற்காற்று வீசிற்று: தூரத்திலிருந்த சவுக்குத் தோப்பிலிருந்து 'ஓ' என்ற பயங்கர சப்தம் எழுந்தது. சரியாய்ப் பன்னிரண்டு மணி. சிவகாமி தலையைப் புரட்டத் தொடங்கினாள். 'அக்கா!' என்ற சொல் மிகுந்த சிரமத்துடன் நாவசையாமல் அவள் வாயினின்றும் வெளிவந்தது. அதை யொட்டி ஏதோ இன்னதென்று விளங்காத சில வார்த்தைகள் உருத்தெரியாமல் சிதைந்து மெல்லிய சப்தமாய் எழுந்தன. தணிகுவும் சம்பந்த முதலியாரும், "என்ன சிவகாமு! வாயைத் திறந்து பேசு. என்னம்மா பண்ணுகிறது?" என்று பதறினார்கள். ஆனால்........ஆம். சிவகாமு கண்களை மூடினாள். பிறகு திறக்கவில்லை.

அத்தியாயம் 9

புரட்சி

பங்குனி மாதம், வெயில் வெகு கடுமையாய்க் காய்ந்து கொண்டிருந்தது. திண்ணையை அடுத்து நடை ஓரத்தில் உட்கார்ந்தபடியே தேவானையம்மாள் பத்துப் பதினைந்து கொட்டாங்கச்சிகளையும், கிளிஞ்சல்கள், தகர மூடிகள் முதலியவைகள் புடைசூழக் கொலு வீற்றிருந்தாள். அவள் நெற்றித் திருநீறும் அதன்மேல் பெரிய குங்குமப் பொட்டும் அதன்மேல் சந்தனப் பொட்டும் இடப் பெற்றிருந்தது. பாவட்டம் பூப்போல் நரைத்திருந்த தலையில் பீர்க்கு, பூசணி, அந்திமந்தாரை முதலிய மலர்களை வைத்துப் பெரியதோர் சொருக்குப்

போட்டிருந்தது. அழுக்கேறி அது இன்ன நிறமென்றே சொல்ல முடியாத ஒரு சிறு கந்தையை அரையில் மட்டும் உடுத்திருந்தாள். கிளிஞ்சல்களையும் நத்தாங் கூடுகளையும் கட்டிய ஒரு மாலையைக் கழுத்தில் அணிந்து கொண்டிருந்தாள்.

ஓயாமல் சிரிப்பதும் பாடுவதுமாகவே இருந்த அவள் இடையில் எழுந்து ஒரு சொம்பைத் தூக்கிக் கொண்டு, "அங்காளம்மா வாடி, கங்காளம்மா வாடி" என்று புலம்பியவளாய், சொம்பைத் தாளம் போடுவது போல் தட்டிக் கொண்டிருந்தாள்.

"பாட்டீ! வா, வா!" என்று மிகுந்த அதிகாரத் துடன் கூறியவண்ணம் ஒரு சிறு குழந்தை அவள் கையிலிருந்த சொம்பைப் பற்றி இழுத்துப் போக ஆரம்பித்தது.

"என் கண்ணே, வாரேண்டா. நீ எப்படிச் சொன்னாலும் அப்படிக் கேட்கிறேன். வரவேண்டுமா, வருகிறேன். போகவேண்டுமா, போகிறேன். நீ சொன்னபடி நான் செய்கிறேன். நீ சொன்னால் நான் கேட்க வேண்டியதுதானே" என்று பயந்து ஒடுங்கிய வண்ணம் அந்தக் குழந்தை இழுத்த விடமெல்லாம் சுற்றிச் சுற்றி நடக்கலானாள்.

கூடத்திலிருந்த சிங்காரவேலு முதலியாரின் மனைவி புனிதத்திடம், "ஐயோ குழந்தையை ஏதாவது செய்துவிடப்போகிறது" என்று கூவினாள்.

"இல்லை, இல்லை. மற்ற விஷயங்களில் எப்படி இருந்தாலும் குழந்தை விஷயத்தில் தொடமாட்டாள். இப்பொழுது கொஞ்சம தெளிந்திருக்கிறது. முன்பு கட்டிப்பிடிக்க முடியாது. இப்பொழுதுதான் எவ் வளவோ குணமாகி இருக்கிறதே" என்றாள் புனிதம்.

அச் சிறு குழந்தை தத்தித் தத்தி நடந்து அக் கிழவியை அங்கு வா, இங்கு வாவென்று ஒவ்வோரிட மாய் அலைக்கழித்தது. முன்னால் அதிகாரத்துடன் அக்குழந்தை செல்ல, வெகு பயபக்தியுடன் கைகட்டி வாய்புதைத்து தனகோடியம்மாள் நடுநடுங்கி நடந்து வருவதைக் கண்டு கலகலவென்று சிரித்துவிட்டாள் புனிதம்.

"என்னடி" கொழுப்பு என் ராஜாவைப் பார்த்துச் சிரிக்கிறாயா?" என்று உறுமினாள் தேவானையம்மாள்.

அச்சிறு குழந்தை தன் சுருண்ட குழல்கள் அசைய, "ஆண்டாம், ஆண்டாம்" என்பதுபோல் தலையையும் கையையும் அசைத்தது.

புனிதம் அப்படியே வாரி அணைத்துக்கொண் டாள். "என் தங்கத்திற்குக் கண்ணேறு வந்துவிடும். கொஞ்சம் கற்பூரமாவது சுற்றிப்போட வேண்டும். எங்க நண்டுக்குட்டிக்கு ஒரு பாட்டுப் பாடலாமா" வென்று பாடலானாள் புனிதம்.

"சின்னஞ் சிறியதோர் கெண்டி - அதைச்
செல்லச் சிறுகையிற் கொண்டு
கன்னங்கள் உப்பப்பால் மண்டி - என்
என்கண்களை நோக்கிடும் நண்டு.
வண்டுகள் போலத் துலங்கும் - ஒளி
வண்ண வசீகரக் கண்முன்
பண்டம் பலகாரம் வந்தால் - மிகப்
பாய்ந்துவரும் எங்கள் நண்டு.
கள்ளெனும் சங்கீதங் காணில் - ஒரு
கள்ள அரவினைப் போலே
மெள்ள இருசெவி மொண்டு - இசை
அள்ளிப் பருகிடும் நண்டு.

ஆம்பல் மலர்தலைப் போலே - அலர்ந்
தாவென்று வாயைத் திறந்து
தேம்பி யழுங்குர லாலே - குழல்
தேங்கிசை கொட்டும்என் நண்டு.
தேயு வெனத்தூய தாகி - தெய்வத்
தேசு நிறைந்த முகத்தில்
ஆயிர முத்தங்கள் தந்தும் - எங்கள்
ஆசை யடங்காக்கண் ணம்மா.

என்று பாடிக்கொண்டிருக்கையில், பாரதி பாடலோ என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள் பாப்பாத்தியம்மாள். "இல்லை அக்கா. இது வேறொருவர் பாடியது."

"அது போகட்டும். பாட்டிலேகூட அவள் நண்டு தானா?"

"போங்கள் அக்கா! அவைகள் இல்லாவிட்டால் பாட்டிலே ருசி ஏது? அப்படிக் கூப்பிட்டால்தான் எனக்குத் திருப்தியாயிருக்கும். அதெல்லாம் கொஞ்சல் இரகசியம். அவள் புக்ககம்போனால்கூட நண்டு என்றுதான் கூப்பிடுவேன். அவள் சிரிப்பதைப் பாருங்களேன். கன்னம், உதடு எல்லாம் ஒரே அச்சு; சிவகாமிதான். பிழைத்துக் கிடக்கட்டும் சிவகாமி வயதுக்கு எங்கள் நண்டு எப்படியிருப்பாள் தெரியுமோ?" என்றாள் புனிதம்.

* * *

மேல் மாடியில் தன் அறையிற் படுத்து ஏதோ சட்ட புஸ்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான் தணிகைவேலன். நன்றாய் இருட்டிவிட்டது: விளக்கேற்றியிருக்கிறதா இல்லையா என்பதைக்கூடக் கவனி

யாதவனாய், கைகளில் திறந்தபடியே புத்தகத்தை வைத்தவனாய்ச் சிந்தையில் மூழ்கியிருந்தான்.

சிவகாமியின் பேச்சும் செயல்களும் ஒவ்வொன்றாய் அவன் நினைவிற்கு வர, கண்களில் கண்ணீர் துளித்தது. அழகிய மலர் மாலைகளால் அலங்கரித்த ஒரு பெரிய புகைப்படத்தை அவன் கண்கள் நோக்கின. அவள் அப்படத்தில் நின்றிருந்த காட்சி தன்னை நோக்கி ஏன் அழவேண்டும் என்று கேட்டதுபோல் தோன்றிற்று. அவளது மாசற்ற எழில் முகம் அவன் உள்ளத்தே தோன்றித் தோன்றி மறைந்தது. சென்று போன நாட்களின் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் அவன் மனத்தில் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்ற, அவ்வறையில் கோபம் வந்தால் அவள் வழக்கமாய்ப் போய் உட்காரும் பலகணியின் ஓரம் நினைவிற்கு வரவே, அப் பலகணியைத் திரும்பிப் பார்த்தான்.

அப்பலகணியில் புன்னகை தவழும் முகத்தினளாய், "ஏன் அத்தான். எங்கே கோபித்துக்கொள், பார்க்கலாம்" என்று தன்னைக் கேட்டுவிட்டு கலகல வென்று சிரிப்பதுபோல் தோன்ற, திடுக்கிட்டான் தணிகைவேலன்.

அத்தியாயம் 10

மாறுதல்

மணி ஏழு. நிலவு கொஞ்சமாய் அவ்வறையின் சாளரத்தின் வழியாய்ப் படிந்திருந்தது. ஒன்றும் தெரியாதவனாய் ஒரே மயக்கத்தில் ஆழ்ந்திருந்தான் தணிகைவேலன்.

"என்ன! தணிகு! விளக்குக்கூட ஏற்றுமல் என்ன செய்துகொண்டிருக்கிருய்? உடம்பு சுகமில்லையா? நீ எங்கேயோ வெளியே சென்றிருக்கிருய் என்றல்லவோ எண்ணியிருந்தேன்? வந்தது முதல் இங்கேயா இருக்கிருய்? நீ இங்கிருப்பது தெரிந்திருந்தால் சின்னப்பையனையாவது கொண்டு வந்து விட்டிருப்பேனே. இரண்டுமாய்ச் சேர்ந்து அவளைக் கொல்லுகிறதுகள். சமாதானம் செய்யமாட்டாமல் தவிக்கிருள். நாமாவது வைத்துக்கொள்ளுவோமென்று கூப்பிட்டால் வரமாட்டேனென்று அவளிடம் போய்ப் புகுந்து கொள்ளுகிறதுகள்" என்று சொல்லியவராய் சம்பந்த முதலியார் அவனருகில் சென்று நெற்றியில் புறங்கையை வைத்துப் பார்த்தார்.

தணிகு அப்பொழுதே தூக்கத்தினின்றும் விழித்தவன்போல் "என்ன! மாமாவா? எப்பொழுது வந்தீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து உட்கார்ந்தான்.

"என்ன தணிகு? உனக்கென்ன உடம்பு? தூங்கிஞயா?" "இல்லை. இல்லை. ஏதோ ஆலோசித்துக் கொண்டிருந்தேன்." "என்ன ஆலோசனை வேண்டிக் கிடக்கிறது? என்ன வீண் யோசனை? பெற்று வளர்த்த நானே உதறித் தள்ளிவிட்டு மேல் நடப்பதைப் பார்க்கிறேன். உலகத்தில் இன்பமும் துன்பமும் கலந்துவரும் என்று சொல்லுகிருர்கள். இன்பமாவது மண்ணுங்கட்டியாவது? துன்பம்தான் தெரிகிறது. ஓய்ச்சல் ஒழிச்சலில்லாமல் துன்பப்பட்டுக் கொண்டேதா னிருக்கிறோம். இந்த லக்ஷணத்தில் தான் நீ பெரியவன், நான் சிறியவன், நீ ஏழை, நான்

பணக்காரன் என்றும், நீ மேல்சாதி, கீழ்சாதி என்றும் ஓயாமல் சண்டையும் சச்சரவும் சொல்ல முடியவில்லை. துன்பமே இல்லாமலிருந்து விட்டதோ மனிதர்கள் படும் பாடு வேறு என்னவோ? போனது போயிற்று. இந்தக் குஞ்சுகளாவது நன்ருய் இருக்கவேண்டாமா? நீ உடம்பைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டால் அந்தக் குழந்தைகளின் கதி என்ன? அந்தப் பெண் — அந்தப் புனிதம் — இவைகளின் பேரிலேயே தானே உயிரை வைத்துக் கொண்டிருக்கிருள்? அவள் கதி என்ன? அவள் என்றைக்கும் சன்யாசிக்கோலமாய் உங்கள் வீட்டிலேயே சேவகம் செய்துகொண்டு உட்கார்ந்திருப்பாளா? மேல் வருஷம் கல்யாணமாகி அவள் புருஷன் வீடு போய்விட்டால், பைத்தியமும் கிழமும் குழந்தைகளுமாய் உன் வீடு என்ன அலங்கோலப்படும்? எழுந்திரு. உன் உடம்பை நீ கவனித்துக் கொள்ளாவிட்டால் எப்படி? எழுந்திரு சாப்பிடவா" என்று கூப்பிட்டார் சம்பந்த முதலியார்.

தணிகு இறங்கிக் கீழே வந்தான். கற்பகம் செய்யுள் நெட்டுருச் செய்துகொண்டிருந்தாள். தம்பி அவளருகில் உட்கார்ந்து கோலி ஆட்டத்தில் தான் ஜயித்த விஷயத்தைப்பற்றி விவரித்துக் கொண்டிருந்தான்.

மௌனப் பெண்ணுய், புனிதம் குழந்தைகளைத் தூங்க வைத்துக்கொண்டிருந்தாள். உடல் மெலிந்து அரை உடம்பாயிருந்தது. முகம்மட்டும் ஒருவிதமான சோர்வுமின்றி அன்றலர்ந்த புது மலர்போல் காணப்பட்டது. மிகுந்த வாத்ஸல்யத்துடன் அவளைப் பார்த்த வண்ணம் சமையல்றைக்குச் சென்ருர் சம்பந்த முதலியார். தணிகு ஒரு விநாடி நின்று

தொட்டிலில் கிடந்த குழந்தையைப் பார்த்தான். உடனே சோகம் பொங்கின புனிதத்தின் கண்களைப் பார்த்தான். ஆஹா!. அவன் மனத்தில் அப்போது உண்டான புரட்சி எத்தகையது? ஒரு மனிதன் மனத்தில் திடீரென்று எழும் எண்ணங்களால் எப்படிப்பட்ட அற்புத மாறுதல்கள் உண்டாகின்றன?

அத்தியாயம் 11

ஆனந்த வெள்ளம்.

அன்று சித்திரா பௌர்ணமி. நில வொளியின் அழகிலேயே ஈடுபட்டவனாய் மேல்மாடியில் நிலா முற்றத்தில் உட்கார்ந்திருந்தான் தணிகைவேலன். குழந்தைகள் வெகு உற்சாகத்துடன், 'நிலா நிலா வா வா' என்று பாடிக்கொண்டும், 'நிலாவா நிழலா' விளையாடிக்கொண்டும் இருந்தன.

லம்போதர முதலியார் வெகு ஸ்வாரஸ்யமாய் வெற்றிலையை மென்று கொண்டிருந்தார். தேவானையம்மாள் வழக்கம்போல் வளைய வந்துகொண்டிருந்தாள். அவளுடைய அந்த நிலைமை வீட்டில் எல்லோருக்கும் சர்வ சாதாரணமாகிவிட்டது,

புனிதம் கையில் சொம்பிலே பாலும் ஒரு கெண்டியும் துவாலையும் எடுத்துக்கொண்டு அங்கே தோன்றினாள்.

"பால் சாப்பிட நேரமாகி விட்டதா என்ன?" என்றான் தணிகு.

சிறு பெண் வெகு அவசரமாய் ஓடி அவள் மடியிலுட்கார்ந்து, தான்தான் முன்னே என்று சொல்வதுபோல் அந்தப் பையனை நோக்கிச் சிரித்தது.

புனிதம் கெண்டியிலே பாலை ஊற்றிக் கொடுக்க ஆரம்பித்தாள். குழந்தை தனது சிறு வாயைக் குவித்து தூவென்று துப்பினுள். 'குபீர்' என்று சிரித்தார் முதலியார். அவர் வாயிலிலிருந்த வெற்றிலை எச்சில் நாற்புறமும் சிதறிற்று.

"ஐய்யய்யோ! சொல்லு தாத்தா! எச்சிற் பட்டால் தோஷமில்லை, எறும்பு கடித்தால் பாவம் இல்லை" என்று பாட்டனுருக்குப் பிராயச்சித்தம் செய்விக்கலானுள் கற்பகம்.

முதலியார் எழுந்து கீழே சென்ருர்.

தணிகைவேலன் மனம் அன்று ஒரு காரணமுமின்றி ஆனந்த மிகுதியினுல் மலர்ந்திருந்தது.

"சீத மணி நெடுவானக் குளத்திடை, வெண்ணிலாவே,
தேசு மிகுந்த வெண்டாமரை போன்றனை."

என்றொரு பாடலுண்டே, அது உனக்கு நினைவிருக்கிறதா புனிதம்?" என்ருன்.

புனிதத்தின் முகம் நாணத்தால் சிவந்தது.

"ஏது, முதலியார்வாள் கற்பனை உலகில் இறங்கி விட்டாற்போலிருக்கிறது. ஐயே, அது தமிழ்க் கவியாயிற்றே! இங்கிலீஷிலேயே மூழ்கிய துரைக்கு இது எப்படி நினைவு வந்தது? ஷெல்லி, கீட்ஸ், இவர்களுடைய வர்ணனைதானே உனக்குப் பிடிக்கும்?" என்று பரிகாசக் குரலில் கூறினுள் புனிதம்.

"இதென்ன இது? என்றைக்காவது நான் தமிழை இகழ்ந்து பேசினது உண்டா? எனக்கு உன்னைப்போல் மனப்பாடம் பண்ண முடியவில்லை."

"அது கிடக்கட்டும் என் நண்டு என்ன சொல்லுகிருள் தெரியுமோ?

பால்போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே, என்றன்

பாங்கில் விளையாடவாராய்........" என்ற அம்புலிப் பாட்டைப் பாட ஆரம்பித்தாள் புனிதம்.

தணிகைவேலன் மௌனமாய் அவள் பாடலைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"காதலர் நெஞ்சை வெதுப்புவை நீ யென்பர் வெண்ணிலாவே" என்ற தொடர் அவள் மனத்துள் எழுந்தது. எங்கே அவ்வார்த்தைகள் வாயில் வந்து விடுமோ என்று பயப்படுபவள்போல் உதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டாள்.

"இந்தப் பாட்டெல்லாம் எனக்கு வேண்டாம். 'நிலா நிலா வா வா' சொல்லு" என்று வற்புறுத்தினன் லம்போதரன்.

"அம்மா புனிதம், மணி பத்தடித்துவிட்டது. குழந்தைகளைத் தூங்கச் சொல்லு. நாளை ஏழு மணிப் பள்ளிக்கூடமாம்" என்று லம்போதர முதலியார் சொல்லுவது கேட்டு எழுந்தாள் புனிதம்.

தணிகு கற்பகத்தையும், (லம்போதரனையும்) சின்னத் தம்பியையும் தூங்க வைத்துவிட்டு, தானும் கண்களை மூடியவண்ணம் படுத்திருந்தான். தூக்கம் வெகு தூரத்திலிருந்தது.

ஒருபுறம் சிவகாமியின் குழந்தை முகமும், மறு புறம் புனிதத்தின் கருணை பொழியும் கண்களும், மாறி மாறித் தோன்றி அவனை வதைக்கலாயின. இன்னதென்று சொல்ல இயலாத ஒரு வகை வேதனையினால் அவன் தவிக்கலானான்.

முன்பு சம்பந்த முதலியார் சொன்னதிலிருந்து அவனும் ஏதோ குழந்தைகளைக் கவனித்துத்தான் வந்தான் என்றாலும் அவன் மனம் சமாதானமடைய

வில்லை. அவர் சொல்லிய ஒவ்வொரு வார்த்தைகளையும்பற்றி ஆற அமர யோசிக்கலானான். அவள் தன்னலம் சிறிதுமின்றி, தனக்கும் தன் குழந்தைகளுக்கும் சேவை செய்வதை நினைக்க நினைக்க அவன் மனம் கசிந்து உருகலாயிற்று. அவளை எண்ணுந் தோறும் அவன் உடல் சிலிர்த்தது.

புனிதம் இல்லாத உலகமே இருண்டுவிட்டது போல் தோன்றலாயிற்று. அவளுடன் பேசிக் கொண்டே இருக்க மனம் துடிதுடித்தது. இளமையிலே அவளுக்குத் தான் பாடம் கற்பித்ததும், வேடிக்கைக் கதைகள் சொல்லிக்கொண்டு இருவரும் ஓயாமல் சிரிப்பதும், ஒவ்வொன்ருய் அவன் நினைவுக்கு வர ஆனந்த மிகுதியினுல் அவன் உடல் புளகித்தது.

அவளுடன் சற்றே தனித்துப் பேச விரும்பினுன். ஆனுல் எங்கே தன்னை இழிவாய்க் கருதி அலட்சியம் செய்துவிடுவாளோ என்று அஞ்சினுன். பாவம், அவனுடைய சட்ட புஸ்தகங்கள் ஒருவிதமான உதவியும் செய்யச் சக்தியற்றவைகளாய் மேஜையின் மேல் திறந்து கிடந்தன. வெகு நேரம் அவ்வறையில் முன்னும் பின்னுமாய் உலாவினுன். சற்றுப் படுக்கையில் உட்கார்ந்தான். மறுபடியும் எழுந்தான். திறந்து கிடந்த புஸ்தகங்களின் தாள்கள் காற்றினுல் மோதுண்டு எழுந்து எழுந்து படுத்தன.

புஸ்தகங்களை மூடி எடுத்துவைத்தான். தீபத்தை ஒருமுறை ஏற்றி அணைத்தான். இப்படி அர்த்தமற்ற செயல்களினுல் அலுத்தவனுய் மறுபடி சாய்வு நாற்காலியில் போய், 'பொத்' என்று வீழ்ந்தான் தலைவிகு.

ஒரே நிசப்தம். சற்று நேரத்திற்கொரு முறை கீச்சிடும் ஆந்தையின் அலறலைத்தவிர வேறொரு சந்தடியும் இல்லை. தூரத்திலுள்ள பெருமாள் கோயில் ஸ்தூபியின் மணி மட்டும் காற்றினால் மோதுண்டு சற்று நேரத்திற் கொருமுறை 'கணகண' வென்று ஒலித்தது.

அவன் நெடுநேரம் மனத்துடன் போராடினான். கடைசியில் கேட்டுவிடுவதென்ற உறுதியுடன் தன் அறையை விட்டுக் கிளம்பினான். நா உலர்ந்து போயிற்று. நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தன. கால்கள் தடுமாறின. மெல்ல சமாளித்துக்கொண்டு கீழே இறங்கினான்.

என்ன கேட்க வேண்டும்? எப்படிக் கேட்க வேண்டும்? எப்படி முதலில் ஆரம்பிப்பது? புறக்கணித்தால் என்ன சொல்ல வேண்டும்? ஒப்புக் கொண்டால் என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்தவனாய் சிவகாமியின் படத்தைப் பார்த்து "சுவற்றின் மேலிருக்கும் பூனை இந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும், அந்தப் பக்கம் குதித்தாலும் குதிக்கும். எந்தப் பக்கம் குதிக்குமென்று யாராவது சொல்ல முடியுமா? அதுதான் அதிருஷ்டம். எதற்கும் கேட்டுவிடுகிறேன். துணிந்துதான் கேட்கவேண்டும். ஏதாவது வேதாந்தம் பேசித் துரத்திவிட்டால் - நாளைக்கு அவள் முகத்தில் எப்படி விழிப்பது? சபல புத்தி - என்று காறி உமிழ்வாளோ? என்னவானாலும் சரி" என்று தீர்மானித்தவனாய் மாடிப்படிகளிலிருந்தபடியே கூடத்தைக் கவனிக்கலானான். சின்ன நண்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. பையன் ஏதோ 'தத்தே பித்தே' என்று உளறிக் கொண்டிருந்தான்.

புனிதம் எழுந்து அவன் படுக்கையை மாற்றி வேறு போட்டுவிட்டுப் படுத்துக்கொண்டாள்.

தேவானையம்மாள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். வாயிற்புறத்து ஹாலில் பற்பல அபூர்வ ராகங்களில் ஆரோகண அவரோகணக் கிரமமாய் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார் லம்போதர முதலியார்.

புனிதமும் அயர்ந்து தூங்கவில்லை. ஏதோ ஒரு விதமான மன நெகிழ்ச்சியினுல் அவளால் தூங்க முடியவில்லை. காலடி ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டாள் புனிதம். தணிகு எதிரே நின்ருன்.

"என்ன, தணிகு! உடம்பு சுகமில்லையா? அப்பாவைக் கூப்பிடட்டுமா?" என்று மிகவும் ஆவலுடன் கேட்டாள் புனிதம்.

"வேண்டாம், வேண்டாம். தூக்கமே வரவில்லை குழந்தையின் குரல் கேட்டது. எடுத்துப் போகலாமோ என்று இறங்கினேன். தூங்கிவிட்டான் போலிருக்கிறதே?" என்ருன்.

அவன் இருந்த நிலைமையையும் மனத் தடுமாற்றத்தையும் ஒரு நொடியில் கண்டுகொண்டாள் புனிதம்.

"மணி இரண்டரை யாகிறதே, இன்னுமா தூங்கவில்லை? தூங்கு" என்று சொல்லியவளாய் சேலையை ஒழுங்குபடுத்திக்கொண்டு கண்களை மூடிக் கொண்டாள் புனிதம். அவள் நெஞ்சு "திக் திக்" கென்று அடித்துக்கொண்டது.

சற்று நேரம் அசைவற்று நின்ருன் தணிகு. கடைசியில் ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக்

கொண்டு "புனிதம்! புனிதம்" என்று கூப்பிட்டான். அவன் குரல் கரகரத்திருந்தது.

"என்ன!" என்று திடுக்கிட்டு எழுந்தாள் புனிதம்.

"புனிதம், நான் ஒரே ஒரு வார்த்தை கேட்க வேண்டும். கேட்கலாமா? தப்பிதமாய் இருந்தால் மன்னிக்கவேண்டும்."

"இத்தனை பீடிகை என்ன? கேளேன்."

"பிறகு கோபிக்கவோ, மாமா, அப்பா எல்லோரிடமும் சொல்லி இகழவோ கூடாது."

"இல்லை."

"என்னை.......என்னை..........."

அதற்குமேல் பேச நாவெழவில்லை. அப்படியே சற்று நேரம் நின்ருன்.

அத்தியாயம் 12

விமோசனம்

புனிதத்தின் முகத்தில் நாணத்துடன் கூடிய இளநகை தோன்றிற்று. இஷ்ட தேவதையைப் பிரார்த்திக்கும் பரம பக்தன்போல் தணிகு அவள் எதிரில் நின்ருன்.

புனிதமும் எழுந்தாள். "என்ன தணிகு, ஏன் தயங்குகிருய்" என்ற வார்த்தைகள், அன்பும் ஆவலும் கலந்த குரலில் அவள் வாயினின்றும் எழுந்தன.

"புனிதம், உன் எல்லையற்ற கருணை மழையை என்மேலும் கொஞ்சம் பொழியக் கூடாதா? புனிதம், இதுவரையில் என்னையே நான் தெரிந்து கொள்ளவில்லை. கடந்த பல மாதங்களாய் உன்னையே

நினைத்து நினைத்து உருகி இருக்கிறேன். ஆனால் உன்னிடம் சொல்ல எனக்குத் தைரியமில்லை. நீ சாக்ஷாத் தேவிபோல் இருக்கிறாய். உன்னிடம் துணிந்து நான் எப்படிக் காதற் பிச்சை கேட்பேன்? வாழ்க்கையின் துயரத்தின் முடிவில், துயரத்தின் இருளில் உன் ஒளியைக் கண்டேன். ஆனால் கண் திறந்து பார்ப்பதற்கு உரிய தைரியம் எனக்கில்லை. உன் அருகில் நெருங்கவும் நான் அருகதையற்றவன். உன் ஒப்பற்ற தியாகத்தினால் நீ பிரகாசிக்கிறாய்........... 'என்னை மணந்துகொள்' என்று நான் எப்படிக் கேட்பது என்றே தயங்கினேன். எத்தனை நாள் மூடிவைக்க முடியும்? ஒரு நாளில்லாவிட்டால் ஒருநாள்—என்னையும் மீறி எந்த முறையில் வெளி வந்துவிடுமோ என்று கூடப் பயந்தேன்—என்னை நீ கோழை என்றாலும் சரி. மனோபல மற்றவன் என்றாலும் சரி. இகழ்ந்தாலும் சரி. ஆகட்டும் என்று சொல். அந்த ஒரு வார்த்தை...........போதும். இல்லை, யோசித்துச் சொல்லுவதானாலும் சரி. போதுமான சாவகாசம், உன்னிஷ்டப்படி எவ்வளவு நாள் வேண்டுமானாலும்.... ....ஆகட்டும்..............." என்று சற்றே நிறுத்தினான்.

புனிதவதியின் இருதயம் ஆனந்த மிகுதியினால் 'படீர் படீர்' என்று அடிக்கத் தொடங்கிற்று. ஆனாலும் சமாளித்துக்கொண்டு, "அதற்கென்ன? மாமாவைக் கேட்போம்" என்று ஏதோ ஒரு சர்வ சாதாரணமான விஷயத்திற்குப் பதில் சொல்லுவது போல் சொன்னாள்.

தணிகு ஒரே மயக்கத்தில் ஆழ்ந்தான். "மாமா இருக்கட்டும், உன்மட்டில் என்ன சொல்லுகிறாய்?"

என்ற வார்த்தைகள் சற்று வேகமாகவே அவன் வாயினின்றும் எழுந்தன. புனிதம் சற்றுநேரம் ஒன்றுமே பேசவில்லை.

தணிகு மேலும் சொல்லத் தொடங்கினன். "ஏன் புனிதம், மாமாவைக் கேட்பதற்கென்ன? இப்பொழுதே எழுப்பிக் கேட்டால் போகிறது."

"அடடா! என்ன அவ்வளவு அவசரம்? இந்த நள்ளிரவில் எழுப்பிக் கேட்டு, தூக்கக் கலக்கத்தில் ஒன்றுகிடக்க ஒன்ருய் உளறிவைக்கவா? யோசித்தால் போகிறது. நான் இதுவரையில் கல்யாண விஷயமாய் யோசிக்கவேயில்லை. சொப்பனம்கூடக் காணவில்லை. திடீரென்று தூக்க வெறியில் எழுந்து ஓடிவந்து, "என்னைக் கல்யாணம் செய்துகொள்ளுகிருயா?" என்று கேட்கிற வழக்கம் வெற்றிலை முதலியார் வீட்டு வழக்கமோ? இல்லாவிட்டால் சட்டம் படித்தவர்களுடைய வழக்கமோ? எனக்கு அப்படி திடீரென்று ஒன்றும் உளறத் தெரியாது, யோசித்து 'நண்டு' 'சின்ன பையன்' எல்லோருடைய ஆலோசனைகளையும் கலந்து கொண்டு தான் சொல்ல முடியும்" என்று விஷமச் சிரிப்புடன் சொன்னுள் புனிதம்.

தணிகுவின் முகம் அசடு தட்டிற்று. அவள் கூறுவது உண்மையா பரிகாசமா, என்று அவனுக்கு விளங்கவில்லை.

"புனிதம், என்ன சொல்லுகிருய்? நீ மறுத்து விட்டால் அடுத்தது தற்கொலைதான். இந்தப் பரம சங்கடமான நிலைமையில் எத்தனை நாட்கள் தானிருக்க முடியும்? புனிதம், எங்கே, என் முகத்தைப் பார்த்துச்

சொல் பார்க்கலாம்" என்று தவித்தான் தணிகை வேலன்.

அவள் மனத்தில் பழைய நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக இறகு முளைத்து எதிரே வந்தன. அன்று சிவகாமியின் கல்யாணத்தன்று தான் பட்ட மன வேதனையும், அதையொட்டி நடந்த விஷயங்களும் நினைவிற்கு வர, மெய்ம்மறந்து அவைகளிலேயே ஈடுபட்டிருந்தாள் புனிதம்.

"புனிதம்! என்னுயிர் உன் கையிலிருக்கிறது. நீ இப்பொழுதே யோசித்து பதில் சொல்லுவதானாலும் சரி, நான் காத்திருக்கிறேன்" என்று அங்கேயே உட்கார்ந்துவிட்டான் தணிகு.

"அடே தருமராசா, அருச்சுனப்பயல் மின்னொளியாள் வீட்டிலே போய்ச் சேர்ந்திட்டான். பேடிப் பயல், சுபத்திரையைக் கூட்டிக்கிட்டு ஓடலே, அட பொறுக்கி நாயே" என்று உளறியவளாய், புரண்டு படுத்துக்கொண்டாள் தேவானை அம்மாள்.

அந்தப் பைத்தியத்தின் உளறலுக்கும் தனக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதோ என்று கேட்பவன் போல் அவளை ஏறிட்டுப் பார்த்தான் தணிகை வேலன்.

வெகுநேரம் வரையில் கற்சிலைபோல் உட்கார்ந்திருந்தாள் புனிதம். அவன் வார்த்தைகளுக்கு இணங்குவதா வேண்டாமா என்பதைப்பற்றி அவள் சிந்திக்கவே இல்லை. வெகுநாளாய்க் கட்டியிருந்த மனக்கோட்டை தன்னெதிரிலேயே சிதைந்துபோய் மறுபடி எழுந்ததை எண்ண எண்ண அவள் மனம் பூரித்தது. எதிர்பாராத அவ்வானந்த வெள்ளம் அவளை ஒரே மயக்கத்தில் ஆழ்த்தியது. உலகமே

தலைகீழாய்ச் சுற்றுவதுபோல் தோன்றிற்று. கோடை முழுவதும் பட்டுக்கிடந்த மரம், முதல் மாரியால் புதுத் தளிர் விடுவதேபோல் இவ்வளவு நாள் அவளால் வெறுக்கப்பட்ட உலக இன்பங்கள் மனத்தில் மறுபடி தோன்றலாயின. சிறு பருவத்தில் அவனையே நேசித்ததும், பிறகு, இப்பிறவியில் இல்லை என்று ஒரேயடியாய் வெறுத்ததும், நெடு நாட்களுக்குப் பிறகு பல வருஷங்களுக்குப் பிறகு, எவ்வளவோ இன்ப துன்பங்களுக்கிடையில் மறுபடி மாறுதலடைவதை எண்ண அவள் மார்பு விம்மி விம்மி அமிழ்ந்தது.

ஒரே நிசப்தம். ஒரு பெருமூச்சு அதன் அமைதியைக் கலைத்தது.

"புனிதம்! புனிதம்" என்று மிகவும் தணிந்த குரலில் கூப்பிட்டான் தணிகு. காதலாலுருகிக் கூவும் மாடப்புறுவின் குரல்போல் அவன் குரல் தழதழத்தது.

பதிலே இல்லை.

மறுபடி கெஞ்சிக் கேட்கலானான் தணிகு.

"மாமா ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் எனக்கொன்றும் தடையில்லை" என்று பெருமூச்சுடன் சொன்னாள் புனிதம்.

தணிகைவேலன் புனிதத்தின் மெல்லிய மலர்க் கரங்களை ஸ்பரிசித்தான். அப்பொழுது அவன் அடைந்த உணர்ச்சியின் வேகத்தைத் தாங்கமுடியாது ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான்.

அந் நிசியில், அந்நிலவின் பேரொளியில் அவர்கள் இருந்த நிலைமையை யாரால் சொல்ல முடியும்?

தேவானையம்மாள் மட்டும் தன் மருண்ட கண்களால் அவர்களை ஏறிட்டுப் பார்த்தாள்.

"புனிதம், உன் கையை முத்த....மிடலாமா?"

"ஓகோ! என்ன! கருவேப்பிலைக்காரன் கதையா யிருக்கிறதே" என்று புருவத்தை நெறித்து ஏளன மாய்ச் சிரித்தாள் புனிதம்.

சடக்கென்று கையை இழுத்துக்கொண்டான் தணிகு. அவள் தன்னைப் பரிகசித்ததனால் வெட்கமும் சந்தோஷமும் ஒருங்கே உண்டாயின.

திடீரென்று புனிதத்திற்கு ஓர் எண்ணம் உதித்தது. தான் விவாகம் செய்துகொள்ளப் போவதாய்த் தெரிவித்தால் திடீரென்று ஏற்படும் மனமாறுதல்களினால் தேவானையம்மாள் பித்தந் தெளிந்து முன் போல் ஆகக்கூடுமென்று அவளுக்குத் தோன்றிற்று.

ஏதோ ஒரு புத்தகத்தில் சோகத்தினால் மனங் கலங்கிய ஒருவருக்குத் திடீரென்று நேரிட்ட ஓர் எதிர் பாராத சம்பவத்தினால் பிரமை தெளிந்துவிட்டதாகப் படித்த விஷயம் நினைவுக்கு வந்தது. ஆனந்த மிகுதியினால் அந்த இரவில் பிறகு அவளுக்குத் தூக்கம் வரவேயில்லை.

தேவானையம்மாளின் பரிதாப நிலைமையை உத்தேசித்தாவது உடனே தணிகுவைக் கல்யாணம் செய்துகொண்டு விடவேண்டுமென்று அவளுக்குத் தோன்றிற்று. அவனது நிலைக்குத் தானும் கொஞ்சம் காரணம் தானே என்று அந்தராத்மாவினின்று ஒரு குரல் எழுந்தது. "ஐயோ! தேவானையம்மாள் எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய துறவி வாழ்க்கையைவிட்டு கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று. சிவகாமி! உலகத்தை

விட்டுத்தான் போனுயே! பாட்டியாரை இந்த நிலைமைக்கு உள்ளாக்க வேண்டுமா?" இப்படியாக புனிதம் பரிதவித்தாள்.

"ஹூம்! என் சுயநலத்தை உத்தேசித்துக் கல்யாணத்தை நினைத்தேன். ஆனுல் இக் கல்யாணத்தால்.... ஆம்; மாமாவுக்கு சந்தோஷம் உண்டாகாதா? பாட்டியார் பைத்தியம் தெளிந்து அவளுக்கு விமோசனம் உண்டாகாதா? வீட்டில் துக்கம் தீர்ந்து மறுபடியும் பழைய சந்தோஷ வாழ்வின் சாயை தோன்ருதா? பாவம்!.... பாட்டியார் இதோ என்னவோ பிதற்றுகிருள். நான் தணிகுவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகத் தெரிந்ததும் பைத்தியம் தெளியப்போகிறது. அப்போது பழையபடி எவ்வளவு உத்சாகமாக இருப்பாள்! எவ்வளவு கலகலப்பாக இருக்கும் வீடு?" என்று கனவு கண்டாள்.

கனவா! ஆம்; கனவுதான். உலகமே ஒரு கனவு தானே. உலகத்தில் நாம் நினைக்கிறபடியா எல்லாம் நடக்கிறது? மனிதனின் அறிவிற்கெட்டாத ஒரு சக்தி தானே உலகத்தை ஆட்டி வைக்கிறது? அதுதானே நமது மனக்கோட்டைகளை எல்லாம் தகர்த்து நிர்மூலமாக்குகிறது?

இல்லாவிட்டால், புனிதத்தின் நினைப்புகள் ஏன் பாழாய்ப் போகவேண்டும்?

* * *

பொழுது புலர்ந்து பொற்கோழி கூவிற்று. லம்போதர முதலியார் 'வேதநாயகன்' என்ற கீதத்தை பூபாள ராகத்தில் அற்புதமாகப் பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது குழந்தைகளுக்குப் போர்த்திவிட்டு, எழுந்திருக்கலாமா வேண்டாமா

இன்னும் சற்று நேரம் கழித்து எழுந்தாற் போதுமா, என்று எண்ணியவளாய்ப் படுத்திருந்தாள் புனிதம். அந்தர வெளியில் பக்ஷி ஜாலங்கள் இன்னிசை எழுப்பி இறைவனை வாழ்த்திச் சென்றன. மாடிப்படியிலே சாவி குலுங்கும் ஓசை கேட்டுத் தலையைத் தூக்கினாள் புனிதம். தணிகு நடதடவென்று இறங்கி வந்து கொண்டிருந்தான். "ஏது, அவனும் தூங்கவேயில்லை போலிருக்கிறது. சரி, எழுந்து பாலை வாங்குவோம்" என்றெண்ணியவளாய் எழுந்து படுக்கையிலேயே உட்கார்ந்து, எழுந்தவுடன் சொல்லும் பதிகத்தைச் சொல்லத் தொடங்கினாள்.

தணிகு வெகு அவசரமாய் தேவானையம்மாள் படுத்திருந்த இடம் சென்றான். 'பாட்டி!' என்று கூப்பிட்டான். 'உம்!' என்று பதில் வந்தது. 'எழுந்திரேன். ஒரு சமாசாரம்" என்றான் தணிகு.

தேவானையம்மாள் அசையாமல் படுத்திருந்தாள். "பாட்டி! சொல்லட்டுமா? புனிதம் என்னைக் கட்டிக் கொள்ளுகிறேன் என்கிறாள்" என்றான்.

"என்ன?" என்று திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள் தேவானையம்மாள்.

"ஆமாம், பாட்டி! புனிதம் என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாள்."

'உன்னையா?' என்று கேட்டபடி சுவரில் திடீரென்று சாய்ந்தாள். 'பாட்டி!' என்று கூப்பிட்ட அவன், "ஐயோ, அப்பா! ஓடி வாருங்களேன்!" என்று கூக்குரலிட்டான். புனிதமும் முதலியாரும் ஓடிவந்தார்கள். தேவானையம்மாள் சிரித்த முகத்துடன் காட்சியளித்தாள். அவளது விழிகள் விழித்தபடியே இருந்தன.

அத்தியாயம் 13

மங்களம்

"அடே சம்பந்தம்! நான் அப்பொழுதே நினைத்தேன் இப்படித்தான் நடக்குமென்று. எனக்கு முன்னமேயே தெரியும். அந்த மாய்மாலக் கள்ளி கல்யாணமே வேண்டாமென்று உட்கார்ந்திருந்த சங்கதி எல்லாம் முன்னமேயேகூட அப்படித்தான் இருந்திருக்கும். அவள் தலை சாயவேண்டுமென்றுதான் தவம் செய்திருப்பாள். வேதாந்தம் பேசினுள். தலை வெந்தது, கால் வேகவில்லை. வருஷ திதி கழிந்ததோ இல்லையோ கல்யாணம். பாரேன் அந்தக் குறும்பை! இந்த மாயக் கள்ளியும் அந்தத் தடியனும் சேர்ந்து மருந்து வைத்தே கூடக் கொன்றிருப்பார்கள். இல்லாவிட்டால் அந்தத் தடிச் சிறுக்கி காலாகாலத்தில் கல்யாணம் செய்து கொண்டு போயிருக்கமாட்டாளா? நான் சொன்னுல் சரியென்று தோன்றுது. வருஷம் திரும்புவதற்குள் இவள் 'சொக்குப் பொடி'யிலே மயங்கிப் போனுனே. முன்னேயே கொஞ்சம் இலைமறைவு காய்மறைவு என்று இருந்திருக்கும். அவளும் ஒழிந்தாள்; அம்பலத்துக்கு வந்துவிட்டது" என்று அம்மாக்கண்ணம்மாள் தெருத் திண்ணையிலிருந்தபடியே பிரசங்கம் செய்து கொண்டிருந்தாள்.

"அம்மாக்கண்ணு! வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று நீ பேசாதே. எனக்குத் தெரியும் அவள் குணம். அப்படி மயக்குவதானுல் நம் சிவகாமி கல்யாணத்தின்போதே அவள் புத்தி அறிந்த பெண்தானே. பணத்திலே குறைவா? பவிஷிலே குறைவா? லக்ஷ ரூபாய் சொத்து ஒரு

காசா, இரண்டு காசா? அப்பொழுதே அவனுக்கே வாழ்க்கைப்பட்டிருக்க மாட்டாளா? என்னவோ தலை கால் புரியாமல் உளறுகிறுயே. அவள் இல்லாவிட்டால் தெரியும் குழந்தைகள் படும்பாடு. அந்த மட்டும் இவனையே கல்யாணம் செய்துகொண்டாளே என்று நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அவளுக்கு இவனைவிட உயர்வாய் வரன் வரும். லக்ஷ ரூபாயா, லேசா? இவனுக்கு நாலு குழந்தைகளிருக்க இரண்டாந்தரமாய் எந்தப் பெரியமனுஷன் பெண் கொடுப்பான்? எங்கிருந்தாவது ஒரு 'கசுமாலம்' தான் வந்து வாய்க்கும். நன்ருய்ச் சொன்னுய், ஒரு வார்த்தை போனுற் போகிறதென்று. அந்த மாதிரிப் பெண் கிடைக்குமா? சீ! சீ! நாக்கு அழுகிப்போகும். இன்னொருதரம் அந்த மாதிரி சொன்னுல் தெரியும்?" என்று மிகுந்த கோபத்துடன் கூவினுர் சம்பந்த முதலியார்.

"காலேஜிலே படித்தவளாயிற்றே, நீயும் மயங்கி விட்டாய். 'தாஸ்பூஸ்'ன்னு இரண்டு படிக்கத் தெரிந்து விட்டால் அவர்கள் சொல்லுவதெல்லாம் சத்தியம். செய்கிறதெல்லாம் உயர்வு. நீயும் ஆண்பிள்ளை தானே? அவனுக்குப் போட்ட பொடி உன் மேலே கூடக் கொஞ்சம் விழுந்ததாக்கும்? போதுமே உன் பவிஷு" என்ருள் அம்மாக்கண்ணு.

"போதும் அம்மாக்கண்ணு, நிறுத்து உன் பிரசங்கத்தை. இல்லாவிட்டால் நான் எழுந்து வெளியே போய் விடுகிறேன்" என்று சொல்லியவராய் எழுந்து வெளியே போய்விட்டார் சம்பந்த முதலியார். அம்மாக்கண்ணு தெருத்திண்ணையில் உட்கார்ந்து மூணு மூணுத்துக் கொண்டிருந்தாள்.

"அத்தான்! நீங்கள் சாப்பிடுங்கள். நான் பாப்பாவைத் தூங்கவைத்துவிட்டுச் சாப்பிடுகிறேன்" என்றாள் புனிதம்.

"புனிதம்! அதை என்னிடம் விட்டுவிடு. நான் பார்த்துக்கொள்கிறேன். நீ சாப்பிட்டு வருவதற்குள் தூங்கிவிடுவாள்" என்று குழந்தையை வாங்கிக் கொண்டார் முதலியார்.

* * *

வீடு முன்போலவேதான் இருக்கிறது. முதலியார் கொஞ்சம் தளர்வடைந்து தோன்றுகிறார். நெற்றியில் கோடுகள் விழுந்திருக்கின்றன. அவர் முகத்தில் சோகம் துன்பம் முதலியவற்றின் சின்னம் இல்லையாயினும் சிற்சில சமயங்களில் தாயாரைப்பற்றியும் மனைவியைப்பற்றியும் சிவகாமியைப் பற்றியும் நினைவு வரும். அப்போது ஒரு சிறு புயல் அவர் உள்ளத்தே தோன்றும். அத்தகைய சோதனை வேளைகளில் பேரன் பேத்திகளோடு விளையாடுவார். "தாத்தா! தாத்தா!" என்று மழலைச் சொற்களால் 'கடைக் குட்டி' கூப்பிட்டு அவரை வதைக்கும்போது இந்த உலகம், தான் நினைத்ததுபோல் நரகமாகிவிடவில்லை என்று. தீர்மானிப்பார்.

முதலியார் தன் வாழ்க்கையில் எவ்வளவோ நஷ்டங்களைச் சகித்தாலும், தன் தாயாரின் முடிவை நினைக்க மனம் தடுமாறும். பெரு வாழ்வு வாழ்ந்த தேவானையம்மாள் கடைசியில் இப்படியா உயிர்விட வேண்டும் என்பதை எண்ணும்போது, "சீ, இது என்ன உலகம்? இந்த பூமியில் எனக்கு இனிமேல் என்ன இருக்கிறது? சீ! இனிமேல் இந்த உலகத்துக்

கும் எனக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. இப்போதே......" என்று இவ்வித பாரமார்த்திக நினைவுகள் தோன்றி அவரைத் தட்டி எழுப்பும்.

ஆனால் அந்த சமயத்தில் அடுத்த அறையில் புனிதமும் தணிகைவேலனும் பேசிக்கொண்டிருப்பது அவர் காதில் விழும். இரண்டு பேர்களும் 'கலகல'வென்று சிரிப்பது முதலியார் வேதனையைப் போக்கி அவருக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். அந்தச் சமயத்தில் குழந்தைகள் அவரைக் கட்டிக்கொண்டு மடியில் நர்த்தனம் செய்யவே முதலியாருக்கு சிரிப்பு உண்டாகும். அப்போது விதியின் வலிமையை அவர் உணர்வார். "ஆண்டவனே! உன் திருவிளையாடல் யாருக்குத்தான் தெரியும்? மனிதன் ஒன்று நினைக்கிறான்; நீ ஒன்று செய்து 'மனிதனே! உனக்குக் கர்வம் வேண்டாம். நீ ஒரு பதர்' என்று போதிக்கிறாய். ஆனால் ஒன்றே ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். இனிமேல் என்னைச் சோதனைக் குள்ளாக்காதே" என்று கண்ணீர் பெருக்கி இறைவனை வேண்டுவார்.

* * *

வஸந்த காலம்; உலகம் புத்துயிர் பெற்று அழகுக் கோயில்போல் விளங்குகிறது. மரங்களும் இளந்தளிர்கொண்டு மின்னுகின்றன. செடிகளில் சிதறிக்கிடந்த மலர்கள் கண்ணைச் சிமிட்டி வண்டுகளைச் சமிக்ஞை செய்து கூப்பிடுகின்றன. சற்று முன் பாழாய்க்கிடந்த உலகத்தில் வஸந்தம் வந்ததும் எவ்வளவு மனோஹரமான மாறுதல் உண்டாகிறது? அத்தகைய மாறுதல் மனிதர் உள்ளத்திலும் கிளர்ச்சியை ஏற்படுத்தி எப்படிப்பட்ட புதுமைகளையெல்லாம் உண்டாக்குகின்றன?

புயலடித்து ஓய்ந்த பிறகு அமைதி ஏற்படுகிறதல்லவா? அதே மாதிரி முதலியார் வீடு இப்போது அமைதியாய் இருந்தது. வஸந்தகாலம் பிறந்த பிறகு அமைதியான வீட்டில் சற்று பரபரப்பு உண்டாயிற்று.

இரவு. அன்றும் பூர்ணிமைதான். தென்றல் காற்று ஒய்யாரமாக அடித்துக்கொண்டிருந்தது. மாடியில் இருந்தபடியே, "புனிதம்!" என்ற குரல் கேட்டது.

"இதோ வந்துவிட்டேன்" என்று வெற்றிலைத் தட்டை எடுத்தவளாய் மாடிக்குச் சென்றாள் புனிதம். முதலியார் மாடியில் நிலாமுற்றத்தில் குழந்தைகளுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தார்.

"நீங்கள் சரியாகவே சாப்பிடவில்லையே ஏன்? பழம் ஏதாவது கொண்டுவரட்டுமா?"

"என்ன புனிதம்? நீ பேசுவது எனக்குப் பிடிக்கவே இல்லை. எங்கிருந்தோ வந்தவன்போல் என்ன 'நீங்கள்' 'தாங்கள்' என்று உபசாரம்? இது ஒன்றுதான் எனக்குப் பிடிக்கவில்லை" என்றான் தணிகு.

"நன்றாயிருக்கிறது. அப்பொழுது அம்மான் மகன் ஒருமையில் கூப்பிடலாம். இப்பொழுது அப்படிக் கூப்பிடுவது மரியாதையா? நம்ம ஜாதி வழக்கப்படி 'அத்தான் என்று கூப்பிடுவதுதான் முறை" என்று சொல்லியவளாய் பழங்களை எடுத்து வந்து வைத்துவிட்டு உள்ளே சென்றாள் புனிதம்.

முதலியார் பேரன் பேத்திகளுடன் பழங்களைக் கணக்குப் பார்க்கப் புகுந்தார். பாப்பாத்தியின் மகன் வையாபுரி அவரிடம் ஏதோ பேச வேண்டுமென்று வந்து உட்கார்ந்தான்.

புனிதம் எழுந்து உள்ளே சென்றாள்.

வையாபுரி வந்த விஷயம் கொஞ்சம் அந்தரங்கம் ஆகவே தணிகைவேலனும் எழுந்து மெல்ல அடிமேல் அடிவைத்து உள்ளே நுழைந்தான். புனிதம் ஏதோ பாடல்களை ஆராய்வதில் ஈடுபட்டிருந்தாள். மெல்ல அவள் பின்னல் வந்து கண்களை மூடினன் தணிகை வேலன்.

“ஒரு வேளை வையாபுரியின் தங்கையாக விருக்கு மோவென்று கைகளைத் தடவிப் பார்த்து “அத்தான்!” என்றுள் புனிதம்.

“இல்லை. தணிகு!”

“அதென்ன அசட்டுப் பிடிவாதம்? அப்படிக் கூப்பிடுவது சரியல்ல. சரியென்று உங்களுக்குத் தோன்றினலும் எனக்கு இஷ்டமில்லை.”

“எனக்குக்கூட புனிதம் என்று கூப்பிடுவது பிரியமில்லை. ஆர்யே!’ என்ருவது “தேவீ!’ என்ருவது கூப்பிடட்டுமா?”

“இது கிடக்கட்டும்; நீ என்ன படித்துக்கொண் டிருந்தாய்? எடு பார்ப்போம்.”

“அருட்பாவைப் படித்துக்கொண் டிருந்தேன். சோதி என்பதைப்பற்றி வள்ளலார் என்ன சொல்லு கிருர் என்று பார்த்துக்கொண்டிருந்தேன். அப் பொழுது ஏதோ ஒரு தனிப்பாடல் நினைவு வந்தது. ‘கதிரவன் ஒளியினும் கண்ணொளி சிறந்ததாகும்.’ அது எதில் வந்தது, யாருடையது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

“ஆமாம். கண்ணொளி யில்லாவிடில் கதிரவன் ஒளி தானகட்டும் எந்த ஒளி தானகட்டும் எப்படித் தெரியும்? ஒளிதான் உலகின் உயிர். வெளியே பார். நிலவின் ஒளியினல் உலகம் மயங்கிக் கிடக்கிறது.

வானத்தில் தன்னொளி பரப்பும் கதிர்மதிபோல் எங்கள் வீட்டிலும் ஒரு கதிர்மதி உண்டு.''

"சரிதான்! போதும் போதும்'' என்று புருவத்தை நெறித்தாள் புனிதம்.

"இல்லை, புனிதம்! கோபித்துக்கொள்ளாதே. அது மதியல்ல, விளக்கு என்று வைத்துக் கொள்ளேன். அதன் பெயர் என்ன தெரியுமோ? இல்—ஒளி அதாவது இல்லொளி என்று பெயர். அந்த விளக்கின் ஒளியினால் பலருக்குக் கண்ணொளி கிடைத்தது. இல்லாவிட்டால் குருடுதான். அந்த ஒளி தேவியின் பிரதிபிம்பம்தான். அதற்கு சுருண்ட குழற் கற்றையுண்டு: சிவந்த இதழ்களுமுண்டு.''

"போதும், போதும். சாக்ஷாத் தேவானையம்மாளுடைய பேரப் பிள்ளைதான்'' என்று சொல்லியவளாய் எழுந்தோடினாள் புனிதம்.

"தாங்கள் திருமகள் புனிதவதியார் தேவானையம்மாளுக்கு என்ன உறவோ?'' என்று கேட்டவண்ணம் அவள் மலர்க்கரங்களைப் பற்றி அவளைப் போக ஒட்டாமல் தடுத்தான் தணிகைவேலன்.

சுபம்

4281